# தினக்குரல்

யாழ்

තිනක්කුරල්

THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 260 திங்கட்கிழமை 29 நவம்பர் Monday 29th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/- பக்கங்கள் : 12


## கொரோனாவால் மேலும் 27 பேர் பலி

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மேலும் 27 பேர் நேற்று முன்தினம் சனிக் கிழமை உயிரிழந்ததாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறந்தவர்களில் 60

பக்கம் 02

## சிகிச்சை பெற்ற சிறுமி உயிரிழப்பு



கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த மரணங்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.

பக்கம் 02

## மா விலை 17 ரூபாவால் அதிகரிப்பு பாண், கொத்து 10 ரூபாவால் உயர்வு

க.பிரசன்னா

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் பேக்கரி உற்பத்திகளின் விலைகளையும் சிற்றுண்டி வகைகளின் விலைகளையும் அதிகரிப்பதற்கு பேக்கரி மற்றும் சிற்றுண்டி உரிமையாளர்களின் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அதனடிப்படையில் 450



கிராம் பாண் ஒன்றின் விலையை 10 ரூபாவால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. எனினும் இதற்கு முன்னர் கடந்த ஒக்டோபர் 11 ஆம் திகதி பாணின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் முதல் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 17 ரூபாவினால் அதிகரிக்க புறக்கோட்டை

பக்கம் 02




முல்லைத்தீவில் ஊடகவியலாளர் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற கண்டனப் போராட்டத்தின்போது (செய்தி உள்ளே)

# ஒமிக்ரான் திரிபால் இலங்கையும் ஆபத்தில்

### -அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என சுகாதார அதிகாரிகள் வலியுறுத்து-




க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள வீரியமிக்க ஒமிக்ரான் கொவிட் வைரஸ் திரிபு தொடர்பில் உலக நாடுகள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள நிலையில் இலங்கை அரசாங்கமும் அவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டிருந்தாலும், புதிய வைரஸ் திரிபுக்கு எதிரான வீரியம் குறைவாகவே காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவன்துடுவ சுட்டிக்காட்டியுள்ளார். இதுவரை கிடைத்த தரவுகளின் பிரகாரம், ஒமிக்ரான் எனும் புதிய திரிபு மிகவும் ஆபத்தானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில்

பக்கம் 02

## ஊடகவியலாளரை தாக்கிய இராணுவத்தினருக்கு பிணை

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் மூவருக்கும் நேற்றுப் பிற்பகல் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தின் தொடராக எழுந்த அழுத்தம் காரணமாக இன்று காலை அவர்கள் மூவரும் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## ஒமிக்ரான் திரிபு ஏற்கனவே நாட்டுக்குள் புகுந்திருக்கலாம்

### -சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர்-

க.பிரசன்னா

நாட்டுக்குள் நுழைபவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் மக்கள் மத்தியிலான எழுமாறான பரிசோதனைகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தடை விதித்தமையினால் நாட்டுக்குள்



ஏற்கனவே ஒமிக்ரான் வைரஸ் திரிபு இருக்கலாமென சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமு

பக்கம் 02

## காஸ் சிலிண்டர்கள் மட்டுமன்றி அடுப்புக்களும் வெடிக்கின்றன

### யாழ்ப்பாணம், கேகாலையில் இரு வெடிப்புகள்-



சுன்னாகம் - கந்தரோடை, காப்பப்புனை வீதியில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு நேற்று வெடித்துச் சிதறியது.

பொன்னுத்துரை சந்திரகுமார் என்பவரது வீட்டில் இந்த

பக்கம் 02

## புலிகள் மீதான் தடையை நீக்கும் மனுவை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நிராகரிப்பு



விடுதலைப் புலிகளை ஐரோப்பாவிற்குள் சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்வதை நீக்குவதற்கான மேன் முறையீட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நீதிமன்றம் கடந்தவாரம் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய அரசியல் துணைப் பிரிவான டென்மார்க்கைத் தளமாகக் கொண்ட மனுதாரர்களுக்கு , அவர்களது சட்டச் செலவுகளையும், ஐரோப்பிய ஒன்றிய பேரவை ஏற்படுத்திய செலவுகளையும் செலுத்துமாறு நீதிமன்றத்

பக்கம் 02

### - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு-

## அமெரிக்கா- இந்தியா இணைய வேண்டும்



இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண இந்தியாவுடன் இணைந்து ஊக்கத்தை கொடுக்குமாறு அமெரிக்காவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமெரிக்காவிடம்

பக்கம் 02

## வடக்கு, கிழக்கில் ஏன் இந்த வன்முறை?

### -பிரதான எதிர்க்கட்சி கடும் கண்டனம்-

வடக்கு, கிழக்கில் மாவீரர் நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட அராஜகங்களைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது ஜனநாயக நாடு எனில் போரில் இறந்தவர்களை அமைதியான முறையில் நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு

பக்கம் 02

## எரிவாயுவின் தரத்தை பரிசோதிக்க 7 மாவட்டங்களிலிருந்து மாதிரிகள்

### -இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன-

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக சமையல் எரிவாயு கசிவினால் வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படும் நிலையில் பாவனையாளர்கள் அச்சமடைந்துள்ளனர். இந்நிலையில் சந்தையில் உள்ள எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பதற்காக 7 மாவட்டங்களில் இருந்து மாதிரிகள்



பெறப்படவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

எரிவாயு தொடர்பில் அண்மைக்காலமாக நாட்டில் வழமைக்கு அப்பாற்பட்ட

பக்கம் 02

## 2 நாட்களில் அடுத்தடுத்து யாழில் ஒதுங்கிய 3 சடலங்கள்

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு நாட்களில் அடுத்தடுத்து 3 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. நேற்று முன்தினம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகளில் இரு சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் நேற்று நெடுந்தீவில் ஒரு சடலம் கரையொதுங்

பக்கம் 02




## வடக்கு , கிழக்கில் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரித்துண்டு. அதை ஆயுதமுனையில் அடக்க முயல்வது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்துகொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்படும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு. இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் நேற்று அரச படைகள் நடந்துகொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது. போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டில் இன ரீதியில் - மத ரீதியில் - மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

## அமெரிக்கா- இந்தியா .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வொஷிங்டனில் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டநிபுணர்கள் தூதுக்குழு அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த தூதுக்குழுவில் மூத்த சட்ட நிபுணர்களான கே.கனக ஈ.ஈஸ்வரனும் நிர்மலா சந்திரஹாசனும் அடங்கியிருந்தனர்.அவர்கள் மூவருமே அமெரிக்க அதிகாரிகளிடம் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா மீண்டும் இணையவிருக்கும் நிலையில், தீர்வு காணப்படாமல் இருக்கும் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிப் பிரச்சினைகளுடன் சேர்த்து தமிழ் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வாஷிங்டன் வலியுறுத்த வேண்டியது முக்கியமானதாகும் என்று சுமந்திரன் லண்டனில் இருந்து த இந்து வின் கொழும்பு செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசனிடம் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவில் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்ட சுமந்திரன் லண்டன் சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் கலந்தாலோசனையை நடத்தினார்.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான மைய குழுவுக்கு ஐக்கிய இராச்சியம் தலைமை தாங்குகிறது.ஜெனீவாவில் உள்ள பேரவையில் 2022 மார்ச்சில் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் இலங்கை தொடர்பாக எழுத்துமூல அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

நீண்டகால உள்நாட்டு போரில் இருந்து இன்னமும் மீண்டுகொண்டிருக்கும் இலங்கையில் அரசியல் தீர்வொன்றுக்காக பேச்சுக்களில் பங்கேற்கும் பிரதான சர்வதேச பங்காளியாக இதுவரையில் இந்தியாவே விளங்கும் அதேவேளை மேற்குலக வல்லாதிக்க நாடுகள் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பிலேயே அக்கறை காட்டுகின்றன.

புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கான ராஜபக்ச அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில் அரசியல் தீர்வொன்றுக்கான அவசர கோரிக்கைக்கு வலுச்சேர்க்க அமெரிக்காவை அழைக்கும் கூட்டமைப்பின் நகர்வு இடம்பெற்றிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.அதன் காரணத்தினால்தான் அரசியலமைப்பு வரைவுதுறையில் நிபுணத்துவம் கொண்டவர்களை முழுவதுமாகக்கொண்ட தூதுக்குழு அமெரிக்கா சென்றது.

2009 ஆண்டில் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு நீதியான அரசியலமைப்பு இணக்கப்பாடு ஒன்றின் ஊடாக நிலையான அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்பதே கூட்டமைப்பின் குறிப்பாக அதன் தலைவரான முதுபெரும் அரசியல்வாதி இரா.சம்பந்தனின் முக்கிய கோரிக்கையாக இருந்து வருகிறது.1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொண்டுவரப்பட்ட இலங்கை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஒரு அவசியமான நடவடிக்கை ஆனால் போதுமானதல்ல என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.மாகாணங்களுக்கு ஓரளவு அதிகாரங்களை உறுதிப்படுத்துகின்ற அந்த திருத்தத்தை இலங்கை அரசாங்கங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

மாகாணங்களுக்கு போதுமான அதிகாரங்களை பரவலாக்கம் செய்யாமல் தொல்லியல் அல்லது சூழல் பாதுகாப்பு செயற்றிட்டங்களின் வடிவில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலப்பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றி வடக்கு, கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றும் அரசின் பாரிய முயற்சிகளை எம்மால் தடுக்கமுடியாது என்று சுமந்திரன் சொன்னார்.

**இந்தியாவின் கோரிக்கைகள்**

13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தவேண்டும் என்பதே இந்தியாவின் தொடர்ச்சியான கோரிக்கையாக இருந்து வருகிறது.ஆனால்,புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கு முன்னதாகவும் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச உறுதியளித்த தேர்தல் சீர்திருத்தங்களை செய்வதற்கு முன்னதாகவும் இலங்கை அரசாங்கம் ஒன்பது மாகாணங்களுக்கும் தேர்தல்களை நடத்துமா என்பது தெளிவாக தெரியவில்லை. (த இந்து )

## புலிகள் மீதான .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் உத்தரவிடப்பட்டது.

புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பத்து வருடங்களின் பின்னர், 2019 ஜனவரி யில் ஐரோப்பிய கவுன்சிலால் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகமீளப் பட்டியலிடுவதை மறுபரிசீலனை செய்யுமாறு அவர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக த் தோல்விக்கு உள்ளாகியிருந்த போதிலும் விடுதலைப் புலிகளின் ''சர்வதேச நிதி சேகரிப்பு மற்றும் புத்துயிர்ப்பு பெறும் ஆற்றல் '', இருந்துவருவதாக ஐரோப்பிய கவுன்சில் 2019 ஆம் ஆண்டு கூறியிருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் முதன்முதலில் 2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்து ஆதரித்தன. சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சட்டத்தின் அர்த்தத்தில் ஆயுத மோதல்கள் இருப்பது பயங்கரவாதத்தைத் தடுப்பதை விலக்கவில்லை என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

## காஸ் சிலிண்டர் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

எரிவாயு சிலிண்டர் சமையல் அறைக்கு வெளியே வைக்கப்பட்டு இருந்தமையால் , அடுப்பு வெடித்து தீ பிடித்த போது பெரும் அசம்பாவிதம் ஏற்படவில்லை.

வெடிப்பின் விளைவுகளை அவதானிக்கும்போது சம்பவ நேரம் யாரேனும் இருந்திருந்தால் உயிர்ச்சேதம் வரை ஏற்பட்டிருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கேகாலை, ரோக்ஹில் - கஹடப்பிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றிலும் நேற்று காஸ் அடுப்பு ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது.

வீட்டின் உரிமையாளர் நேற்று காலை தேனீருக்காக தண்ணீர் வைத்துவிட்டு குளியலறைக்கு சென்ற போது பலத்த வெடிச்சத்தம் கேட்டுள்ளது. இதன்போது, எரிவாயு சிலிண்டருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

நாட்டில் கடந்த சில நாட்களாக பல காஸ் சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இதன் காரணமாக யுவதி ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இதற்கு காஸ் காலவையில் ஏற்பட்ட மாற்றமே காரணம் எனக் கருதப்படுகிறது. இந்நிலையில் கலவையில் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்படும் அழுத்தங்கள் காரணமாகவே காஸ் அடுப்புக்களும் வெடித்துச் சிதறுகின்றதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (ச-23,40)

## ஒமிக்ரான் திரிபால் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரான் கொவிட் வைரஸ் திரிபானது பல வழிகளில் நாட்டுக்குள் நுழைய முடியுமெனவும் சுகாதார அமைச்சு இதுகுறித்து விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும் தற்போதைய நிலைமை காரணமாக இலங்கையும் ஆபத்தில் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய மாறுபட்ட திரிபு பல வழிகளில் நாட்டிற்குள் நுழைய முடியும். கடல் வழியாக நாட்டிற்குள் நுழைய முடியும், அதே வகையான திரிபுகள் உள்நாட்டிலும் திரிபடையக்கூடும். புதிய திரிபுகள் குறித்து பொதுமக்கள் அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒமிக்ரான் கொவிட் வைரஸ் திரிபு காரணமாக தென்னாபிரிக்காவின் பல நாடுகளில் இருந்து வருபவர்களை தடைசெய்ய அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சு எடுத்த தீர்மானத்தை சுகாதார தொழிற்சங்கங்கள் வரவேற்றுள்ளன.

எனினும் எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமையினால் இந்த புதிய திரிபு நாட்டுக்குள் நுழைந்ததா என்பதை எவ்வாறு தீர்மானிக்க முடியுமெனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் மரபணு பரிசோதனைகளை மேற்கொண்டு புதிய திரிபினை கண்டறிந்துள்ளதாகவும், எனவே எழுமாறான பரிசோதனைகளை மேற்கொள்ளாத இலங்கை போன்ற நாடு, ஒமிக்ரான் திரிபு நுழைந்ததா என்பதை நாடு எவ்வாறு தீர்மானிக்க முடியும் என சுகாதார தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் கேள்வி எழுப்பியுள்ளார். இந்நிலையில், நேற்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை 6 ஆபிரிக்க நாடுகளின் பயணிகளுக்கு நாட்டிற்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கா, போட்ஸ்வானா, லெசதோ, நமீபியா, சிம்பாப்வே, சுவாசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் பயணிகளுக்கு நாட்டிற்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்படுவதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் புதிய கொரோனா திரிபான ஒமிக்ரான் அடையாளங்காணப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நேற்று நாட்டிற்கு வருகை தந்த பயணிகளை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தியுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மசேன தெரிவித்துள்ளார்.

## சிகிச்சை பெற்ற .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறிஞ்சாக்கேணி பகுதியை சேர்ந்த ரபீஸ் பாத்திமா நிபா (வயது-6) சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி காலை இடம் பெற்ற படகு பாதை விபத்தின் போது கிண்ணியா அல் அஷ்கர் வித்தியாலயத்தில் தரம் 1 இல் கல்வி பயிலும் மாணவியே இவ்வாறு உயிரிழந்தமை மேலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது தாயுடன் பாடசாலைக்கு செல்வதற்காக படகில் பயணித்த போது இருவரும் நீரில் மூழ்கிய நிலையில் ஏனையோருடன் மீட்கப்பட்டனர். தாய் உயிர் தப்பிய நிலையில் கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் தாயான என்.பர்வீனிடம் வினவிய போது, எனது பிள்ளை சம்பவம் நடந்து ஆறு நாட்களாக கண்களை திறக்கவில்லை திருகோணமலை வைத்தியசாலையில் இருந்து ஞாயிறு இரவு மரணித்ததாக சொன்னார்கள் என ஆழ்ந்த சோகத்துடன் கண்ணீர் விட்டழுதார். இரு பெண் பிள்ளைகளில் சிரேஷ்ட பெண் பிள்ளையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் உடல் கிண்ணியா நடுத்தீவு பொது மையவாடியில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் ரபீஸ்.நூர்தீன் பர்வீன் தம்பதியின் சிரேஷ்ட புதல்வியுமாவார்.

மொத்தமாக படகு விபத்தில் ஐந்து மாணவர்கள் உட்பட ஏழு பேர் மரணித்துள்ளனர்.

## 2 நாட்களில் .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியது. இவ்வாறு சடலங்கள் அடுத்தடுத்துக் கரையொதுங்குவதற்கான காரணங்கள் தெரியாத நிலையில் இந்த விடயத்தில் மர்மம் நீடிக்கிறது.

இது தொடர்பில் கடற்படையினரும் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-75)

## எரிவாயுவின் தரத்தை .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் இடம்பெற்றுள்ளதாகவும் எரிவாயுவின் தரத்தை பரிசோதிப்பது இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பொறுப்பாகும் எனவும், அது தரத்தை பரிசோதிக்க ஒத்துக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள 16 ஆம் பிரிவிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட எரிவாயு கசிவினால் வெடிப்புச் சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் இம்மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஆறு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இவ்வருடத்தில் எட்டு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் 13ஆம் திகதி பொலன்றுவை வெலிகந்த பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த 19 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்திருந்தார்.

கடந்த 4 ஆம் திகதி வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் வாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர். கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்து எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 20 ஆம் திகதி கொழும்பு 7 குதிரை பந்தயத்திடல் அருகில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் காயமடைந்திருந்தனர். கடந்த 25 ஆம் திகதி பன்னிப்பிட்டிய கொட்டாவ பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடிப்பில் வீடு பலத்த சேதமடைந்திருந்தது. கடந்த 26 ஆம் திகதி நிக்கவரெட்டிய கந்தேகெதர பகுதியிலுள்ள வீடொன்றில் எரிவாயு கசிவினால் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஒமிக்ரான் திரிபு ஏற்கனவே .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேஷ் தெரிவித்துள்ளார்.

இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி மூலமான நோய் எதிர்ப்பு சக்தி காரணமாக ஒரு நாடாக நாம் கோவிட் நோயை ஓரளவு கட்டுப்படுத்தி வருகிறோம். ஒமிக்ரான் வைரஸ் திரிபு மீண்டும் திரிபாகும் என்பதுடன் இது தற்போதுள்ள அனைத்து தடுப்பூசிகளுக்கும் கட்டுப்படாதது. எனவே ஒமிக்ரான் நாட்டிற்குள் நுழைகிறது என்பது வசந்த காலம் முடிவுக்கு வருகிறது என்று அர்த்தம்.

ஆனால் நாட்டிற்குள் நுழைபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுவதில்லை. அவற்றை நாம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். சமீபத்திய வாரங்களில், பி.1.1.529 மாறுபாட்டின் அடையாளத்துடன் நோய்த்தொற்றுகள் கடுமையாக அதிகரித்துள்ளன. முதல் உறுதிப்படுத்தப்பட்ட பி.1.1.529 தொற்று நவம்பர் 9, 2021 அன்று சேகரிக்கப்பட்டது. இந்த வகை அதிக எண்ணிக்கையிலான திரிபுகளைக் கொண்டுள்ளது.

பொது மக்களை தயார் படுத்துவதற்கு ஏற்றவகையில் மக்கள் மத்தியில் எழுமாறான பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். மாவட்டம் முழுவதுமுள்ள பாடசாலைகள், தொழிற்சாலைகளை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்து அவற்றின் முடிவுகளின் அடிப்படையில் நடமாடும் ஆய்வு கூடங்களை செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவால்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுக்கு மேற்பட்டவர்களில் 22 பேரும் 30வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 05 பேரும் அடங்குகின்றனர்.

இவர்களுடன் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14,305 ஆக அதிகரித்துள்ளது.

## மா விலை .. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பேக்கரி பொருட்களின் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து கொத்து ரொட்டியின் விலையினை 10 ரூபாவினாலும் பேக்கரி உற்பத்திகளின் விலையினை 5 ரூபாவினாலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கோதுமை மாவின் விலையானது 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வருடம் ஒக்ரோபர் 11 ஆம் திகதி கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் அதிகரிப்பதற்கு பிரிமா நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

எனினும் தற்போது கோதுமை மாவின் விலை அதிகரிப்புக்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் பாண் விலை மேலும் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கார்த்திகேசு பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

பாண் உற்பத்திக்கு தேவையான மா விலையை 17 ரூபாவினாலும் ஸ்பெசல் பாண் மற்றும் பணிஸ் வகைகளுக்கு தேவையான மா விலையை 23 ரூபாவினாலும் கோதுமை மா விநியோக நிறுவனங்கள் அதிகரித்துள்ளது. இதனால் 450கிராம் நிறையுடைய ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாவினாலும் பணிஸ் வகைகளின் விலையை 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (21)

-தமிழ்த் தேசிய கட்சி தலைமைகளை-

# ஓரணியில் ஒற்றுமைப்படுத்தும் முயற்சிக்கு சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும்



தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழீழ மக்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் சதானந்தனின் நினைவுதின நிகழ்வில் பங்கெடுத்து உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் இன்றைக்கு மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் என்றுமில்லாதவாறு நெருக்கடிமிக்க காலமாக இன்றைய நிலைமை இருக்கின்றது.

இங்கு பேசிய எல்லோருடைய பேச்சுக்களும் நாங்கள் இன்னும் சரியான இடத்திற்கு வந்து இருக்கவில்லை என்பதையும் இன்னும் தமிழ் மக்களுடைய பிரச்சினை தொடர்பாக சரியான ஒரு கோட்டிலே நாங்கள் பயணிக்கவில்லை என்பதையும் மிகமிக தெளிவாக கோடிட்டு காட்டுகின்றன.

அதற்காக நானும் பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது. ஏனென்றால் இந்த இனத்துக்காக மிக நீண்டகாலமாக உழைத்தவன் என்கிற ரீதியிலும் மிகப்பெரிய பாரம்பரியமுடைய கட்சி ஒன்றினது தலைவர் என்கிற ரீதியிலும் நானும் அதற்கான பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கிறேன்.

அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு எந்த பக்கம் திரும்பினாலும் ஒன்றுபட்ட தரப்பாக ஒற்றுமை பட்ட தரப்பாக நாங்கள் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்கிற விடயம் இன்று நேற்றல்ல மிக நீண்ட காலமாகவே பேசப்பட்டு கொண்டிருக்கின்றது.

ஆனால் துரதிஷ்டவசமாக இந்த விடயம் இன்னும் கைகூடவில்லை. ஆனால் அதற்காக நாங்கள் இதை கைவிட்டு விட முடியாது இதை கைகூட வைக்கின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டே ஆக வேண்டிய கட்டாயம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். அன்றைய நாட்களில், அதிலும் குறிப்பாக தமிழரசுக் கட்சி தமிழினத்தினுடைய தந்தை செல்வாவினுடைய தளபதியாக, தலைவர் அமிர்தலிங்கம் அவருடைய தளபதியாக இங்கே இருக்கின்ற சித்தார்த்தனுடைய தந்தையார் தர்மலிங்கம் அவர்கள் அந்த நாட்களில் செயற்பட்டதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

கட்சியிலே அல்லது கட்சிக்கு உள்ளேயோ ஒரு பிரச்சினை வருகிறது என்றாலும் சரி கட்சிக்கு வெளியிலே ஒரு பிரச்சினை ஏற்படுகிறது என்றாலும் சரி முதலில் சமாதானம் பேசுகிற ஒரு தூதராக இருந்தவர் தர்மலிங்கம்தான். அன்றைக்கு பெரிய தலைவர்களோடு விவாதிக்கும் விடயங்களை அவர்களோடு விவாதித்து விட்டு அதை இளைஞர்களாகிய எங்களோடு அன்றைய நாட்களிலேயே பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவரிடம் நாங்கள் கேள்விகளை எழுப்பும் பொழுது மிகவும் கவனமாக அதை உண்மையாக அவர் எங்களுக்கு விளக்கமளித்து இருப்பதை நான் இன்றைக்கும் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன்.

அவருடைய வழித்தோன்றலாக இங்கே இருக்கக்கூடிய சித்தார்த்தன் அவர்கள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியான கால சூழ்நிலையில் நான் அவரிடம் வேண்டுகோளாக என்று கூட வைக்கலாம் உரிமையோடு நான் சொல்லுவேன் தமிழ்த் தேசிய இனத்தினுடைய நன்மை கருதி சிதறிப் போயிருக்கக் கூடிய தமிழர் தரப்புக்களை ஒற்றுமைப் படுத்த வேண்டிய தேவை கருதி அதனுடைய முக்கியத்துவம் கருதி இன்றைக்கு சகல தமிழ் தரப்புகளையும் ஒன்றிணைக்க கூடிய ஆற்றல் அவரிடம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் எந்த ஒரு விடயத்தையும் நிதானமாகவும் பொறுப்பாகவும் செயற்படுத்தி எல்லோரோடும் நட்போடு பழகக் கூடிய தன்மையும் இருக்கக்கூடிய சித்தார்த்தன் ஒற்றுமை முயற்சியை தலைமை தாங்கி கொண்டு செல்ல வேண்டும் என்று நான் அவரிடம் மிகவும் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றேன். அதை அவர் நிறைவேற்ற வேண்டும். அது தான் அவர் தமிழினத்திற்கு செய்யக்கூடிய ஒரு மாபெரும் கடமையாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன் என்றார்.40

# யாழ்.சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு தயாரிப்பு நிறுவனத்தில் ஆய்வு

-அமைச்சு செயலர் அதிகாரிகள் விஜயம்-



இலங்கையிலேயே முதற்தடவையாக, சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு (Solar Roof Tile) தயாரிக்கும், யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு இயங்கும், இகோஸ்டீம் (Eco-steem) நிறுவனத்தின் சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு (Solar Roof Tile) உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைக்கு - சூரிய, காற்று, நீர் மின் மற்றும் திட்ட அமுலாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஹேமந்த சமரகோன், இலங்கை மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலு அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபால மற்றும் அதிகாரிகளும் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டனர்.

அவர்கள் அங்கு, இகோஸ்டீம் சூரிய சக்தி மின் உற்பத்தி கூரை ஓடு உற்பத்தி பற்றிய விடயங்கள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன், உற்பத்தியை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு ஆலோசனைகளையும் வழங்கி, தம்மால் எதிர்காலத்தில் வழங்கப்படக்கூடிய ஆதரவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள்.

# ஒமிக்ரான் வைரஸ் திரிபின் அறிகுறிகள்

உலக நாடுகள் சிலவற்றில் தற்போது கண்டறியப்பட்டுள்ள கோவிட் வைரஸின் கடும் திரிபான ஒமிக்ரான் திரிபின் நோய் அறிகுறிகள் சம்பந்தமாக தென் ஆபிரிக்காவின் மருத்துவ பேரவை அடிப்படை ஆய்வுகளை நடத்தி தகவல்களை வெளியிட்டுள்ளது.

தசைவலி, லேசான இருமல், உடல் சோர்வு என்பன இந்த வைரஸ் தொற்றின் அறிகுறிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கோவிட் தொற்றிய நோயாளிகளிடம் காணப்பட்ட வாசனையை நுகர முடியாத தன்மையை இந்த புதிய வைரஸ் திரிபிடம் காண முடியவில்லை என தென் ஆபிரிக்க மருத்துவப் பேரவையின் மருத்துவர் எஞ்சலிக் கோழுடிசி தெரிவித்துள்ளார்.

புதிய வைரஸ் திரிபு பரவுகிறது என்ற எச்சரிக்கையை இந்த மருத்துவரே முதலில் விடுத்திருந்தார்.

கடந்த 18 ஆம் திகதி தன்னிடம் வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் கோவிட் தொற்றாளிகள் என அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்திருந்தார். தொற்றாளர்களிடம் நடத்தப்பட்ட மரபணு ரீதியிலான ஆக்கிரமிப்பு சம்பந்தமான பரிசோதனைகளில் இந்த புதிய திரிபு கண்டறியப்பட்டது.

எவ்வாறாயினும் ஒமிக்ரான் என்ற புதிய கொரோனா வைரஸ் திரிபு தென் ஆபிரிக்காவில் முதலில் பரவியது என்பதற்கான சாட்சியங்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

# கூத்து நூல் வெளியீடு

ஈழத்தின் பழமையான கூத்துக் களிலொன்றாகிய நொண்டி நாடகம் நூல் இன்று வட மாகாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர். திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளுகின்றார்.

நூலின் வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் அறிமுகவுரையை பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை ஆசிரியரும் எழுத்தாளருமாகிய ந.குகபரன் நிகழ்த்தவுள்ளார்கள். ஏற்புரையை நூலின் பதிப்பாசிரியரும்.யாழ்ப்பாண கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான யோ.யோண்சன் ராஜ்குமார் நிகழ்த்தவுள்ளார்.மேற்படி நிகழ்வு இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (28)

# ரி - 56 ரக துப்பாக்கியுடன் தோப்பூரில் ஒருவர் கைது

திருகோணமலை -தோப்பூர் பிரதேசத்தில் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

கந்தளாய் - சூரியபுர பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சந்தேகநபர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பாலத்தோப்பூர் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெடி பொருட்களுடன் பதவியவில் ஐவர் கைது

பெருந் தொகையான வெடி பொருட்களை வான் ஒன்றில் எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் ஐந்துபேரை பதவிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பதவிய – மதவாச்சி பிரதான வீதியின் போகஸ் சந்தி பகுதியில் இடம்பெற்றுள்ளது என விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பதவிய,மதவாச்சி மற்றும் கெகிராவ பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பதவிய பராக்கிரம பகுதியிலுள்ள கருங்கல் உடைக்கும் வேலைத்தளம் ஒன்றின் களஞ்சிய சாலையிலிருந்த பெருந்தொகையான வெடி பொருட்களை திருடி மதவாச்சி பகுதியிலுள்ள கருங்கல் உடைக்கும் வேலைத்தளத்திற்கு விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்லும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் கெப்பித்திகொள்ளாவ நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# கிளிநொச்சியை சேர்ந்த இரு மாத குழந்தையின் தாய் மரணம்

2 மாத ஆண் குழந்தையின் தாய் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

தலைச்சுற்று மற்றும் வாந்தி காரணமாக பாதிக்கப்பட்ட பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உதயநகர் கிழக்கு - கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 19 வயதான நிதோ தர்சிகா வயது என்ற இரண்டு மாத ஆண் குழந்தையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மேற்படி பெண் தலைச்சுற்று மற்றும் வாந்தி காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 22ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பொலிசார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்கு சடலம் உத்தரவிடப்பட்டுள்ளது. (48)

# தடுப்பூசிகளுக்கும் ஒமிக்ரான் அடங்காது

-வைத்தியர் சந்திம ஜீவந்தர கூறுகிறார்-

(க.பிரசன்னா)

உலகில் கண்டறியப்பட்ட ஐந்தாவது கொவிட் பிறழ்வான ஒமிக்ரோன் வைரஸானது அதிகம் வேகமாக பரவக்கூடியதால் வீரியமானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தடுப்பூசிகள் பெற்றுக் கொண்டாலும் தொற்றினால் பாதிக்கப்படும் தன்மை அதிகமெனவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மரபணு விஞ்ஞானப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

புதிய வைரஸ் திரிபு தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் நிரூபிக்கப்பட்ட தரவுகள் இல்லையென்றாலும் இயற்கையான நோயெதிர்பு சக்தி மற்றும் தடுப்பூசி மூலமான நோயெதிர்ப்பு சக்தி ஆகியவற்றிலிருந்து விலகிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

புதிதாக கண்டறியப்பட்ட கொவிட் திரிபு வைரஸை தடுப்பதற்கான வழிகளை தெளிவுபடுத்தும் அதே வேளையில், இந்த நேரத்தில் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்வது அவசியமெனவும் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை கடுமையாகப் பின்பற்றுவது அவசியமெனவும் தெரிவித்துள்ளார்.

புதிய திரிபானது, வெவ்வேறு அறிகுறைகளை கொண்டதாக காணப்படலாமெனவும் நோயின் தீவிரத் தன்மையில் வேறுபாடுகளை நிரூபிக்கலாமெனவும் அறிகுறியினை தவிர்க்கலாமெனவும் அடையாளம் காணப்பட்டுள்ளதால் இவை அதிக வீரியம் கொண்டதாக கணிக்கப்படுகின்றது.


தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களும் புதிய வைரஸ் திரிபினால் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை டெல்டா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மீண்டும் புதிய திரிபுடன் தொற்று ஏற்பட்டுள்ளது.

எனினும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அடிப்படைய சுகாதார விதிமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டுமெனவும் உடலில் நோயெதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் போது பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். சினோபார்ம் தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளவர்களின் நோயெதிர்ப்பு சக்தியானது குறைந்து வருவதால் அத்தகைய நபர்கள் இரண்டாவது டோஸ் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக இணைந்து செயற்பட சுமூகமான சந்திப்பு

நாவலர் கலாசார மண்டபம் தொடர்பாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ்.மாநகர சபையும் இணைந்து செயற்படுத்தும் வகையில் சுமூகமான சந்திப்பொன்று நேற்று 28 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனனதினத்தை முன்னிட்ட இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றான நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைத்தலும் நாவலர் பெருமானின் பணிகளை அதன் மூலமாக முன்னெடுத்தல் என்ற செயற்றிட்டத்துக்கு அமைவாக இந்து சமய, கலாசார அலுவவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பணிகளை யாழ்.மாநகர சபையோடு இணைந்து செயற்படுத்தும் வகையில் சுமூகமான முறையிலே சந்திப்பு யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பில் , இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனால், நாவலர் கலாசார மண்டபம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள த்திற்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டது. இதில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், பிரதமரின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர், விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் நாவலரின் பணிகளை நாவலர் கலாசார மண்டபத்தில் இரு தரப்பினரும் இணைந்து முன்னெடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
திங்கட்கிழமை 29 நவம்பர் 2021 Monday 29th November 2021

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

இலங்கையின் பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பான முதலாவது தேசியமட்டத்திலான பெண்கள் நலன்சார் கணக்கெடுப்பு பல்வேறு கவலைக்குரிய விடயங்களை ஆதாரங்களுடன் முன்னிலைப்படுத்துகின்றது . நாட்டில் ஐந்தில் ஒரு பெண் [20.4%] நெருங்கிய துணையால் உடல் அல்லது பாலியல் வன்முறைக்கு இலக்காகியுள்ளதாக கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது. ஆயினும் .நெருங்கிய துணையால் பாலியல் வன்முறையை அனுபவித்த பெண்களில் அரைவாசிப்பேர் [49.3%] முறையான உதவியை எங்கும் நாடியிருக்கவில்லை. அதேசமயம் நெருக்கமான துணையால் உடல் மற்றும் பாலியல் வன்முறையை அனுபவித்த பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் [35.7%] தற்கொலை செய்துகொள்ள நினைத்துள்ளதாகவும் கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது. பெண்கள் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையில் வன்முறை ஏற்படுத்தும் கடுமையான விளைவுகளை இந்த கணிப்பீடு எடுத்துக்காட்டுகிறது.நாட்டில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளிலிருந்தும் மீட்பதற்கும் தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களை உதவி பெற ஊக்குவிப்பதற்கும் ஆதரவளிக்கும் முறைமைகள் கிடைப்பதை அவர்கள் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதும் அவசியமென்பதை இந்தக் கணிப்பீடுகள் வெளிப்படுத்துகின்றன.

ஒருவரின் பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடுகளை அனுபவிப்பது பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். மேலும் எம்மைப் போலவே மற்றவர்களைப் பார்க்கும் விதத்தையும் பாதிக்கும் பல காரணிகளைக் கருத்தில் கொள்வதும் முக்கியம். ஆண்களும் பெண்களும் ஏன் வேறுபடுகிறார்கள்? பாலினம் இயற்கையானது என்று ஆட்கள் நினைப்பது மிகவும் பொதுவானது. பாலினம் எமது உடல் வேறுபாடுகளை பிரதிபலிக்கிறது.உடலே பாலினத்தை தீர்மானிக்கிறது. அத்துடன் பாலின அடையாளத்தில் வளர்ப்பு அல்லது சமூகமயமாக்கல் மிகப்பாரிய பங்கினை கொண்டிருக்கின்றது என்பதை நிராகரித்து விட முடியாது. உலகின் பெரும்பாலான பகுதிகளில், ஆண்களும் பெண்களும் முற்றிலும் வேறுபட்ட மனிதர்களாக நடத்தப்படுகிறார்கள். உண்மையில் பாலினங்கள் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் விதிமுறைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலைத்தேச சமூகங்களைப் பொறுத்தவரை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தும் கருத்துக்கள் மிகக் குறைவாகும். ஆனால் கீழைத்தேச நாடுகளில் ஆண்கள் கடினமாகவும், வலிமையாகவும்,தீர்க்கமானவர்களாகவும் , உடல் ரீதியாக பலமானவர்களாகவும் இருக்கவேண்டுமென்று பொதுவாக கருதப்படுகிறது .

இந்தக் கட்டமைப்புக்கு ஏற்பவே சிறுவர்களும் ஆண்களும் வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் இந்த எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழவில்லை என்றால் அந்த சிறுவர்களும் ஆண்களும் தமது சகாக்களால் குறிப்பாக மற்ற சிறுவர்கள் மற்றும் ஆண்களால் குறைவாக மதிப்பிடப்படுகிறார்கள் .இந்தக் கலாசாரமே அதிகளவில் பெண்களுக்கு சமமாக மதிப்பளிக்காமல் மேலாதிக்க உணர்வை கொண்டிருக்கவும் வன்முறையை பிரயோகிக்கவும் தூண்டுதலாக அமைகின்றதென கூறப்படுகிறது.பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச தினம் கடந்த வியாழக்கிழமை நவம்பர் 25 இல் அனுசரிக்கப்பட்டது . பாலின அடிப்படையிலான வன்முறைகள் பரவலாக காணப்பட்டாலும் இலங்கையின் நிலைவரத்தை பொறுத்தவரை கவலைக்குரியதாகவே காணப்படுகிறது. ஒருபுறம் பல்வேறு துறைகளில் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றபோதிலும் மறுபுறம் அவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பாலின சமத்துவமின்மையால் பெண்களின் உரிமைகள் கடுமையாக மீறப்படும் சம்பவங்களை ஊடகங்கள் மூலம் தொடர்ந்து அறிந்துகொள்ள முடிகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது கவலையான விடயம் மட்டுமல்லாமல் முழுமையாக இல்லாதொழிக்கப்படவேண்டிய பாரதூரமான பிரச்சினை. கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவ ஆரம்பித்தபின் முடக்கம், பயணக் கட்டுப்பாடுகளின் போது, குடும்ப வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இந்தச் சம்பவங்களில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களெனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கோவிட்-19 இனால் ஏற்பட்ட மன அழுத்தத்துடன் வாழும் ஆட்கள் வீட்டிலிருந்து வேலை செய்வது அதிகரித்திருந்தமை சச்சரவுகள் மற்றும் வன்முறைக்கு வழிவகுத்திருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது .பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளை இல்லாமல் செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் , கொள்கை மற்றும் சமூக ரீதியான மாற்றங்கள் மட்டுமல்லாமல் மனப்பான்மையிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

வன்முறைக்கான அடிப்படைக் காரணங்களை அடையாளம் கண்டுகொள்வதும் அவசியம் . உடல்ரீதியான தாக்குதல்கள்,நிந்தித்தல் உளவியல் வன்முறை உட்பட அனைத்துவகையான வன்முறைகளும் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.யாவற்றிலும் மிக முக்கியமானது தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் வன்முறையை நியாயப்படுத்தும் மனப்பான்மை மாற வேண்டும். அத்துடன் காரணம் எதுவாக இருந்தாலும், எந்தவொரு பாலின அடையாளத்தையும் கொண்ட ஒருவருக்கு எதிரான எந்தவொரு வன்முறையும் தவறானது என்பதைப் பற்றிய புரிதல் மிக , மிக அவசியம்.நாட்டின் அதிஉயர் சபையான பாராளுமன்றத்தில் அண்மையில் பெண் உறுப்பினர் ஒருவர் தொடர்பாக சபையில் பிரயோகிக்கக்கூடாத வார்த்தைகளை சக ஆண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பயன்படுத்தியதாக கண்டனங்கள் பரவலாக வெளிப்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிவதுடன் சமூகத்தில் உயர் அந்தஸ்தில் இருக்கும் பெண்கள் கூட இத்தகைய நிலையை எதிர்நோக்குவதாயின் சாதாரண பெண்களின் பாதுகாப்பின்மை பற்றி அனுமானித்துக்கொள்ள முடியும். இந்த நெறிப்பிறழ்வை மாற்றுவது தொடர்பாக சகலரும் சிந்திக்க வேண்டும்.

# சீனாவின் அழுத்தத்திற்கு மீண்டும் பணிந்தது இலங்கை



சுதா ராமச்சந்திரன்

**அசுத்தமான சேதன உரத்தை வழங்கியதாகக் கூறப்படும் சீன நிறுவனமொன்றுக்கு மில்லியன் கணக்கான டொலர்களை வழங்க கொழும்பு இணக்கம் தெரிவித்துள்ளது**

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உரம் தொடர்பான சச்சரவு சீனாவுக்கு சாதகமாக முடிவடைந்துள்ளது. பழுதான தெனக் கண்டறியப்பட்டதால் கொழும்பால் நிராகரிக்கப்பட்ட சீன சேதன உர நிறுவனம் ஒன்றின் உரிமைகோரலில் 70 சதவீதத்தை செலுத்துவதற்கு இலங்கை இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவின் கூற்றுப்படி, 20,000 தொன் உரங்களை ஏற்றுமதி செய்ததற்காக கிங்டாவோ சீவின் பயோ–டெக் குழுமத்திற்கு இலங்கை 6.7 மில்லியன் டொலர்களை செலுத்தும். அதேவேளை , இலங்கை அந்த நிறுவனத்திடம் இருந்து புதிய பங்குகளை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் கூறியதாக சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சீன சேதன உரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது அல்லது இந்த ஏற்றுமதிக்கு இலங்கை எந்தவிதமான கட்டணத்தையும் செலுத்தாது என ஒரு மாதத்திற்கு முன்னர் அளுத்கமகே தெரிவித்திருந்தார். அந்த நிலைப்பாட்டிலிருந்து இலங்கை மாறியிருக்கிறது.

'இந்தப் பிரச்சினையால் இராஜதந்திர உறவுகளை பாதிப்படையச் செய்ய எங்களால் முடியாது' என்று அரசாங்கத்தின் இறுக்கமான நிலைப்பாட்டை விளக்கியிருந்தார் அளுத்கமகே.

சீனாவுக்கும் இலங்கைக்கும் வலுவான உறவுகள் உள்ளன. கடந்த தசாப்தத்தில், இலங்கையின் மிகப்பெரிய முதலீட்டாளராக சீனா உருவெடுத்துள்ளதுடன், தீவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது . சீனாவின் கடனில் மிகவும் ஆழமாக மூழ்கியுள்ள இலங்கை, சீனாவின் கடன் வலையில் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. முக்கியமாக, பெய்ஜிங் உலக மனித உரிமை மன்றங்களில் இலங்கையை பலமுறை பாதுகாத்து வந்துள்ளது . பெய்ஜிங்கிற்கும் இலங்கையின் ஆளும் ராஜபக்ஷ குடும்பத்திற்கும் இடையிலான வலுவான சமன்பாடு சீன–இலங்கை உறவின் ஒரு முக்கிய அங்கமாகும்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட முரண்பாடு சேதன உரம் தொடர்பானது. ஏப்ரல் 29 அன்று, இலங்கை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ தீவை உலகின் முதல் முழுமையான இயற்கை விவசாய நாடாக மாற்றும் திட்டத்தை அறிவித்தார். விவசாய இரசாயனங்களுக்கு அரசு முழு தடையை விதித்தது. இலங்கை சேதன உரத்தை உற்பத்தி செய்யாததால், அவசரமாக இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.கிங்டாவோ சீவின் 99,000 தொன் சேதன உரங்களை வழங்குவதற்கான அரசாங்க ஒப்பந்தத்தை வென்றெடுத்திருந்தது.

செப்டெம்பரில், 20,000 தொன்கள் கொண்ட முதல் சரக்குகளை ஏற்றிச்சென்ற ஹிப்போ ஸ்பிரிட் என்ற கப்பல், கொழும்பு துறைமுகத்தை நோக்கிச் சென்றபோது, இலங்கை மண்ணியல் விஞ்ஞானிகள் எர்வினியா போன்ற தாவர நோய்க்கிருமிகளை உர மாதிரிகளில் கண்டறிந்தனர்.

இத்தகைய உரங்களை இலங்கை மண்ணுக்குப் பயன்படுத்துவது இலங்கையின் உயிரியல் பாதுகாப்பிற்கு கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் எதிர்காலத்திலும் விவசாயத்தை பாதிக்கும் என்பதால், கப்பல் கொழும்பில் நிறுத்த அனுமதிக்கப்படவில்லை.

வார்த்தைப் போர் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து பதிலுக்குப் பதிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



இலங்கையின் தேசிய தாவர தொற்றோதுக்கப்படுத்தல் சேவையின் (மீகிகு) 'விஞ்ஞான பூர்வமற்ற கண்டறிதல் முறைமையும் முடிவும் 'சர்வதேச விலங்கு மற்றும் தாவர தொற்றோதுக்கல் சாசனத்துக்கு அமைவாக இல்லை' என்று கிங்டாவோ சீவின் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. தேசிய தாவர தொற்றோதுக்கப்படுத்தல் சேவை பொறுப்பற்ற முறையில் தவறான மற்றும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஊடகங்களுக்கு தெரிவித்ததாகவும் அது குற்றம் சாட்டியுள்ளது. உரம் பற்றி விவரிக்க 'நச்சு, குப்பை, மாசு' போன்ற 'இழிவான வார்த்தைகளை' பயன்படுத்தியதற்காக சீன நிறுவனம் ஊடகங்களையும் சாடியது. இது 'சீன நிறுவனங்கள் மற்றும் சீன அரசாங்கத்தின் பிரதிமையை கடுமையாக அவதூறு செய்வதை நோக்கமாகக் கொண்டது' என்று அது குறிப்பிட்டிருந்தது.

ஹிப்போஸ்பிரிட் கப்பலிலிருந்த உரத்துக்காக 9 மில்லியன் டொலரை செலுத்துவதை இலங்கை வர்த்தக மேல் நீதிமன்றம் நிறுத்தியபோது, கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் முயற்சியில் இறங்கியது. நிறுவனத்திற்கு பணம் செலுத்தாததற்காக இலங்கை அரசுக்கு சொந்தமான மக்கள் வங்கியை அது கறுப்புப் பட்டியலில் சேர்த்தது.

சர்ச்சையைத் தீர்ப்பதற்கு இலங்கையின் விவசாய அமைச்சுடன் கிங்டாவோ சீவின் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில், பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டது . கேள்விமனுக்கோரல் இணக்கப்பாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் 70 சதவீதத்தையும் கூடுதல் சரக்குக் கட்டணங்களையும் இலங்கை செலுத்த வேண்டும். மேலும், உரத்தின் தரம் காரணமாக அல்ல, இறக்குமதி அனுமதி சர்ச்சையால் ஏற்றுமதி நிராகரிக்கப்பட்டது என்று விவசாய அமைச்சு அறிக்கை வெளியிட வேண்டும். தெளிவாக, இலங்கைக்கு அனுப்பப்படும் கிங்டாவோ சீவின் தரம் பற்றிய சர்ச்சையால் , அமெரிக்கா உட்பட 50க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அதன் வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை.

சீனாவின் அழுத்தத்திற்கு இலங்கை கட்டுப்படுவது இது முதல் முறையல்ல.


உதாரணமாக, 2017 ஆம் ஆண்டு, அம்பாந்தோட்டை ஆழ்கடல் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக சீனாவிடம் இருந்து பெற்ற 1.2 பில்லியன் டொலர் கடனை இலங்கை அரசாங்கம் செலுத்த முடியாத நிலையில், அந்தத் துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கும் அதனுடன் சுற்றுப்புறத்திலிருந்த 15,000 ஏக்கர் நிலத்தையும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பதிலாக 15,000 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து சைனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸிற்கு கையளிக்க வேண்டியிருந்தது.

கொழும்பில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கைக்கு சிறந்த நன்மைகளைப் பெறுவதற்காக அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்ய மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இலங்கை இந்துசமுத்திரத்தில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகத்தை சீனாவசம் ஒப்படைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

சேதன உர சர்ச்சையில் இலங்கையுடனான மோதலில் சீனா வெற்றி பெற்ற நிலையில், ராஜபக்ஷ அரசாங்கம் இரசாயன உரங்கள் மீதான தடையை ஓரளவு நீக்கியுள்ளது. உரத்தை இறக்குமதி செய்ய தனியார் துறையை அனுமதித்துள்ளது. விவசாயிகள் அதனை வெளிச்சந்தையில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டும்.

சீனாவின் அழுத்தம் கொழும்பை நச்சு சேதன உரம் தொடர்பாக கட்டுப்படுத்தினால், விவசாயிகளின் வெகுஜன எதிர்ப்புக்கள் அரசாங்கம் அதன் உரக் கொள்கையில் இருந்து பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது..

த டிப்ளோமற்



# ஊடகவியலாளர் மீது தாக்குதல் புரிந்த இராணுவத்தினர் மீது சட்ட நடவடிக்கை தேவை

## -பிரதேச சபை உறுப்பினர் எஸ்.குகநேசன்-



முல்லை முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய இராணுவத்தினர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், இது பாரிய ஆர்ப்பாட்டமாக வெடிக்குமென,புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.குகநேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் வி.விஸ்வச்சந்திரன் படையினரால் தாக்கப்பட்டமை குறித்து கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல், எவ்வாறு ஊடகவியலாளரைத் தாக்க முடியும் என்பதையும் கேள்வியாக எழுவதுடன், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், மாவீரர் தினத்தினை இறந்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வாக அனுஸ்டிக்க முடியும் என்பதைத் தாங்க முடியாத இந்த இராணுவத்தினர், இவ்வாறான விளையாட்டுத்தனமான செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

அது மட்டுமல்லாது, எமது ஆலயங்களில் சப்பாத்துக் கால்களுடன் நிற்கின்றார்கள்.

இவர்களுக்கு இந்த அனுமதியைக் கொடுத்தது யார்? அரசாங்கத்திடம் நாம் இந்த கேள்விகளை கேட்க விரும்புகின்றோம். வடக்கு-கிழக்கிலுள்ள ஆலயங்களுக்குள், இராணுவத்தினர் குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். உண்மையிலேயே ஒரு புத்த கோயிலுக்குள் சப்பாத்துக் கால்களுடன் போக முடியுமா?

இவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.இதற்கான அனுமதியை யார் கொடுத்தது? அரசாங்கம் இவ்வாறு இவர்களை நடக்குமாறு, சொல்லி இருக்கின்றதா? இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(15)

# வடமராட்சி அம்பனில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவு

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி அம்பனில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 71.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.


வெள்ளிக்கிழமை காலை -08.30 மணி தொடக்கம் சனிக்கிழமை காலை-08.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில், வடமராட்சி அம்பனில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவானதாக, திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மேற்படி காலப் பகுதியில் ஆனையிறவில் 54.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 38.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 37.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், கிளிநொச்சி நகரத்தில் 28.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 21.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், இரணைமடுவில் 20.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 20.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, தெல்லிப்பழை, திருநெல்வேலி, நயினாதீவு மற்றும் யாழ்ப்பாணம் கோட்டை, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஆகிய பகுதிகளில் குறித்த காலப் பகுதியினுள், 20 மில்லிமீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியே, பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(18)

# ஒளி வெள்ளத்தில் மிதந்தது ஆரிய குளம்



யாழ்.நகரில் அமைந்துள்ள தமிழர்களின் வரலாற்றுப் பெருமை மிக்க ஆரியகுளத்தைச் சுற்றி புதிதாக பொருத்தப்பட்டுள்ள அனைத்து மின்விளக்குகளும் யாழ்.மாநகரசபையினரால் நேற்று முன்தினம் இரவு ஒளிர விடப்பட்டன.

இதனால்,ஆரியகுளப் பகுதி ஒளிவெள்ளத்தில் மிதந்தது. இந்த அரிய காட்சியை பொது மக்கள் பலரும் கண்டுகளித்தனர். மிக நீண்ட காலத்தின் பின்னர், ஆரியகுளமானது,பல மில்லியன் ரூபா செலவில் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றமையும், குறிப்பிடத்தக்கது.

(18)

# இரணைமடுக் குளம் திறப்பு

## -அயற் கிராம மக்களுக்கு எச்சரிக்கை-



இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால், முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள், மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்குமாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டுள்ளன. தற்போது குளத்தில் இருந்து வெளியேறுகின்ற நீர் கனகராயன் ஆறு வழியாக கடலினைச் சென்றடைகின்றது.

கனகராயன் ஆற்றுப் பக்கமாக தேவையற்ற முறையில் ஒருவரும் செல்ல வேண்டாமெனவும், குறிப்பாக சிறுவர்கள் எவரும் இங்கு செல்ல வேண்டாமெனவும், இதேவேளை கூடுதலான மழை வீழ்ச்சி பதிவாகி, இரணைமடுக் குளத்தின் ஏனைய வான் கதவுகளும் திறக்கப்படும் சந்தர்ப்பங்களில், தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற பொது மக்கள், ஆண்டு தோறும் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி நகர்வது வழக்கமாகும்.

ஆகவே, கூடுதலான மழை வெள்ளம் ஏற்படும் பட்சத்தில், இப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தற்காப்பு நிலையில் இருக்குமாறும், அறிவிக்கப்பட்டுள்ளது.

(27)

# இரணைமடுவின் 4 வான் கதவுகள் திறப்பு




வடமாகாணத்தில் பாரிய நீர்ப்பாசனக்குளமான, இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ராஜகோபால் ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக இரணைமடுக் குளத்திற்கு அதன் நீரேந்து பகுதிகளிலிருந்து அதிக நீர் வரவு காரணத்தினால், நேற்று

அதிகாலை 6 மணி அளவில் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டன.இரண்டு வான் கதவுகள் 6 அங்குலத்திற்கும், இரண்டு வான் கதவுகள் 12 அங்குலத்திற்கும் திறக்கப்பட்டுள்ளன. இரணைமடுக் குளத்திற்கு அதன் நீரேந்துப் பகுதிகளிலிருந்து அதிக நீர் வருகின்றமையால், வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.எனவே, தற்போது வெளியேறுகின்ற நீர் காரணமாக, மக்கள் அச்சமடையத் தேவையில்லையென, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்தார். இரணைமடுக் குளத்தின் முழுமையான நீர் மட்டம் 36 அடியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(52)

# வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் கிராம மக்கள் பெரும் அவதி



முல்லைத்தீவு ஒட்டுசுட்டானின் இத்திமடு கிராமத்திற்கும் தட்டார்மலைக் கிராமத்திற்கும் இடையிலான, வீதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதனால், போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இத்திமடுக் கிராமத்தில் உள்ள கச்சல்கொடி குளத்தின் நீர் வடிந்தோட முடியாமல் ஐந்து கிலோமீற்றர் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக இத்திமடு, தட்டார்மலை, பழம்பாசி, தண்டுவான், மாமடு, ஒதியமலை ஆகிய கிராமங்களின் மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலை மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றிற்குச் செல்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த ஐந்து கிலோமீற்றர் வீதி உயரமான முறையில் புனரமைக்கப்பட வேண்டுமென, மேற்படி கிராமங்களின் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கடந்த காலத்தில் குறித்த வீதியின் நிலைவரம் தொடர்பாக ஆராயப்பட்ட போதிலும், வீதியினை உயரமான முறையில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததனால், ஒவ்வொரு வருடமும் பருவ மழையின் போது ஏற்படும் வெள்ளம் வீதியை மூடி தேங்கி நிற்பதாகவும், இதனால் போக்குவரத்து செய்ய முடியாமல் தாம் பெரிதும் அவதிப்படுவதாகவும், பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(27)

# அறநெறிப் பாடசாலைகளில் நூலகம் அமைக்கும் திட்டம் யாழில் ஆரம்பம்



ஆறுமுக நாவலர் பெருமானின் 200வது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டும், முக்கிய அம்சமாக 192 வது குருபூசை தினத்தை முன்னிட்டும், நாவலர் பிறந்த மண்ணில், இலங்கைப் பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய, நாடுபூராகவும் அறநெறிப் பாடசாலைகளில் 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, நூலகம் அமைக்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரனின் ஏற்பாட்டில், பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், நந்திக்கொடி அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் தனபால் மற்றும் ஏனைய பிரமுகர்கள் கலந்து கொண்டு, நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

நாவலர் பெருமானின் அந்தப் புரட்சிகரமான சைவ சமயத்திற்கு அவர் ஆற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த வகையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பிரகாரம், நாவலர் பெருமானின் 200 ஆவது நூற்றாண்டு விழாவிற்கு அவர் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடு செய்வதற்கும்,ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில்,இலங்கை முழுவதிலும் நாவலரின் 200 ஆவது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக சகல ஏற்பாடுகளையும், இந்து கலாசாரத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. நாவலர் பெருமானைப் போற்றுவோம் சைவத்தை காப்பாற்றுவோம்.

(40)

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் இறுக்கமான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள்

## -அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை-

கிளிநொச்சியில் அடிக்கடி ஏற்பட்டுவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு, சுற்றுவட்டம் அமைப்பதோ, சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதோ காலதாமதமாகலாம் என்பதனால், உடனடியாக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்ற நிலை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் அண்மையில், பாடசாலை மாணவி ஒருவர் விபத்துக்குள்ளாகி மரணமடைந்தார். இதனையடுத்து, வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு, உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல தரப்புக்களினாலும், முன்வைக்கப்பட்டது.

விபத்து நடைபெற்ற அடுத்த நாளே, மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவனின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, கல்விப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் தரப்பினருடன், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் ஆகியோரை உள்ளடக்கி விசேட குழுவொன்று தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டிருந்தது.

இது குறித்து விரிவாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, டிப்போ சந்தியில் சுற்றுவட்டம் அமைப்பதில் இடச்சிக்கலும், சட்டச் சிக்கல்களும் இருக்கலாம் என்பதால், அதனைச் செய்துமுடிக்க காலதாமதமாகலாம் என்பதைச் சுட்டிக்காட்டி, அதுவரையில் காத்திருக்காமல், பரந்தன் சந்தி முதல், முறிகண்டி வரையில் ஏ9 வீதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டுமெனப் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில், மாவட்டச் செயலாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோர் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி, இன்று திங்கட்கிழமைமுதல், பரந்தன் சந்தியிலிருந்து முறிகண்டி வரையில், வேகக் கட்டுப்பாட்டை கணிக்கும் கருவிகளுடன், பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து, வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(27)

# கிராம அலுவலர் அலுவலகம் விசமிகளினால் உடைப்பு



முழங்காவில் கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம் என்பன நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டுள்ளதாக, முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு இவ் அலுவலகங்கள் இனந்தெரியாத விசமிகளினால் உடைக்கப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த பத்து நாட்களுக்கு முன்பு, முழங்காவில் அன்புபுரம் முன்பள்ளி உடைக்கப்பட்டு, சேதமாக்கப்பட்ட நிலையில், தற்போது முழங்காவில் கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம் என்பன உடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக, மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(27)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டதனைக் கண்டித்து முல்லையில் கண்டன ஆர்ப்பாட்டம்




முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளரும், முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான, விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தினை கண்டித்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், வடமாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ,அரசியல் பிரமுகர்கள் ,சமூக செயற்பாட்டாளர்கள்,பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து, இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு நகரப்பகுதியில், குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், சித்திரவதைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும், ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கோரி, குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021



'நாகரிகத்தின் வேர் காடுகள் தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.'

இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

## பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்.!"

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# சமூக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக இறுக்கமான நடவடிக்கை

## -அமைச்சர் டக்ளஸ்-

மக்களுக்கு பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் மீளாய்வுக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற வாள் வெட்டுப் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான வகையில், பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்துவது தொடர்பாக யாரும் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

எமது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை களைவதற்கு எமது படையினரையும், எமது இராணுவத்தினரையும் பயன்படுத்துவதில், எந்தவிதமான தவறும் கிடையாது. எனவே, வீதி விபத்துக்களையும் சமூக விரோதச் செயற்பாடுகளையும் களைவதற்கு, திங்கட்கிழமை தொடக்கம் சிறப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.அதுதொடர்பான மேலதிக அனுமதிகள் எவையும் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்றும் தெரிவித்தார். அத்துடன், கொரோனா பரவல், தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள நிலைவரம், அனர்த்த முகாமைத்துவம், விவசாயம் மற்றும் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான காணிகளில் வேளாண்மைகளை மேற்கொள்ளுதல், உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. இக்கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மாவட்டத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரி, பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (55)

# யாழில் சொர்க்கத் தீவை அமைக்க யோசனை முன்வைத்த எம்.பி

யாழ்.குடாநாட்டிலுள்ள ஒரு தீவை சொர்க்கத் தீவாக மாற்றுமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த யோசனையினை பிரபல நடிகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உத்திக பிறேமரத்ன நாடாளுமன்றில் முன்வைத்துள்ளார்.

இவ்வாறும் அமைக்கப்படும் தீவானது பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்குமெனத் தெரிவித்த அவர், இது இலங்கையின் அந்நிய செலாவணி நெருக்கடியையும் தீர்ப்பதற்கு உதவுமெனவும் கூறியுள்ளார்.

அதேவேளை கொழும்புத் துறைமுக நகரத்தைப் போன்று ஒரு நிலப்பரப்பை உருவாக்கி, கடலோரமாக மிருகக்காட்சிசாலையை அமைக்கவும், உத்திக பிறேமரத்ன ஆலோசனை வழங்கினார். இதன் மூலம் கடலினால் சூழப்பட்ட, மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கைத் தீவில், மிருகக்காட்சிச் சாலையை நிறுவிய முதலாவது நாடாக இலங்கை மாற்றம் பெறுமெனவும், அது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் எனவும், அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கட்டாக்காலி மாடுகளினால் விவசாயச் செய்கை நாசம்

## -விவசாயிகள் பெரும் கவலை-



மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விடத்தல் தீவு கிராமத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட விவசாய செய்கையினை மாடுகள் சேதப்படுத்தியுள்ள போதும், உரிய அதிகாரிக்குத் தகவல் வழங்கிய நிலையில், தற்போது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கவலை தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, விடத்தல் தீவு கிராமத்தில் அமைந்துள்ள நட்டாம்பிட்டி எனும் விவசாய நிலப்பரப்பில், விடத்தல்தீவு கிராம விவசாயிகள் கால காலமாக பெரும் போகப் பயிரச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், குறித்த விவசாயிகள் ஒவ்வொரு வருடமும், கட்டாக்காலி மாடுகளினால் பல இலட்சம் ரூபா பெறுமதியான சேதங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச் செய்கையானது, கடந்த வெள்ளிக்கிழமை பெருமளவான மாடுகளினால் அழிக்கப்பட்ட நிலையில், கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 6 ஏக்கர் விவசாயச் செய்கை, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வயலில் பயிர்கள் எதையும் விட்டு வைக்காமல் மாடுகள் அழித்து விட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்குத் தகவல் வழங்கிய போதும், அப்பகுதிக்குக் குறித்த அதிகாரி சமுகமளிக்கவில்லையென, பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே, பிரதேசச் செயலாளர், அரசாங்க அதிபர் மற்றும் உரிய அதிகாரிகள் தமது வாழ்வாதார பிரச்சனைக்கு உரிய தீர்வை உடன் பெற்றுத்தர வேண்டுமென, அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கன மழையினால் வீடுகளுக்குள் புகுந்த வெள்ளம்

## -பொதுமக்கள் பெரும் அசௌகரியம்-



காற்றுடன் பெய்த பலத்த மழையினால், வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியானில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையினால், வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளது.

இந் நிலையில், வெள்ளம் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு அறிவித்திருந்தும், அவர்கள் வருகை தந்து நிலைமையை ஆராயவில்லையென, பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே, உதவி செய்வதற்கு விரும்பும் நல்லுள்ளங்களை, தங்களுக்கு உதவுவதற்கு முன்வருமாறு, அங்கு வாழும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வேலும்மயிலின் பூதவுடல் தகனம்



ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகனின் தந்தையார் கார்த்திகேசு வேலும் மயிலும் தனது 99 ஆவது வயதில், கடந்த வியாழக்கிழமை காலமானார்.முன்னாள் அதிபரும் சமூக சேவையாளருமாகிய இவர், கடந்த சில தினங்களாக நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடலுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உட்பட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இவரது இறுதிக் கிரியைகள், வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், நவாலி இந்து மயானத்தில், நேற்று தகனம் செய்யப்பட்டது. (36)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை

## -வன்மையான கண்டனம்-

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் சுயாதீன ஊடகவியலாளர் இலங்கை இராணுவத்தினரால் மிலேச்சத்தனமாக தாக்கப்பட்ட சம்பவத்தினை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.இது தொடர்பில், தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர் தாயகப் பகுதிகளில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் நீண்டகாலமாகவே, அரச படைகளாலும், புலனாய்வாளர்களாலும் தொடர்ந்தும் பல அச்சுறுத்தல்களையும், விசாரணைகளையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். ஜனநாயக நாடு என்று கூறப்படுகின்ற இதே நாட்டிலேயே, ஒரு ஊடகத்துறையினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட விதமாக, மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான மிலேச்சத்தனமான சம்பவங்கள், இன்னும் நாட்டை மிக மோசமான பாதைக்கே இட்டுச்செல்லும். இந்த நாட்டில் தமிழர்களாகிய நாம், எமது தாயகப் பகுதியில் நிம்மதியாக வாழ்வதற்கு நாம் விரும்பும் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றோம்.

ஆனால், இவ்வாறான மோசமான சம்பவங்கள் தொடரும் பட்சத்தில், எமக்கான தீர்வு என்பது சாத்தியமற்றது என்பதை, அனைத்து அரசியல் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்களது கருத்து மற்றும் ஊடக சுதந்திரத்தை ஆயுதம் கொண்டு அடக்க நினைப்பதென்பது, இந்த அரசின் மடமைத்தனம். முல்லைத்தீவு ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது, தமிழர்களுடைய ஊடக சுதந்திரத்தின் மீதும், கருத்துச் சுதந்திரத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே கருத முடியும். மேலும், இச் சம்பவத்திற்கான நீதியான விசாரணை மேற்கொள்ளப்படுவதுடன், குறித்த ஊடகவியலாளரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு,

இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென, இந்த அரசாங்கத்தை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்துகின்றது எனவும், அந்த ஊடக அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

-தமிழர்தாயகத்தில் இடம்பெறும் கொடுமைகள்-

# வெளிவருவதைத் தடுக்கும் நோக்கமே ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்

வடகிழக்குத் தமிழர் தாயகப்பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகள் வெளிவருவதைத் தடுக்கவே, ஊடகவியலாளர்கள் திட்டமிட்டு தாக்கப்படுகின்றார்கள் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே வடகிழக்குத் தமிழர்களின் ஒரே நம்பிக்கையான ஊடகத்துறையை பாதுகாக்க நீதித்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட சுயாதீன ஊடகவியலாளரும், முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று முல்லைத்தீவு நகரில் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவுமாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவத்தினை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தற்போது வடகிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள, தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு நம்பிக்கை ஊடகத்துறை மாத்திரம்தான்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகளை உடனடியாக வெளிக்கொணர்வது எமது தமிழ் ஊடகவியலாளர்களாவர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் கொடுமைகள் வெளிக்கொணர்வதைத் தடுக்கவே, இவ்வாறு திட்டமிட்டு ஊடகங்களை அடக்கியொடுக்குகின்ற செயற்பாடுகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன. அந்தவகையிலேயே ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரனும் இராணுவத்தினால் தாக்கப்பட்டார்.

குறிப்பாக ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்தின் தாக்கப்பட்ட தினத்தன்று, ஊடகவியலாளர் தாக்கப்படுகின்றார் என பொதுமக்களால் எனக்கு வழங்கப்பட்ட தகவலுக்கேற்ப உடனடியாக முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்றிருந்தேன்.

குறித்த ஊடகவியலாளருக்கு நான்கு இராணுவத்தினர் சேர்ந்து தாக்குதல் நடாத்தியிருக்கின்றார்கள். பச்சைமட்டையில் முட்கம்பி சுற்றி தாக்கியிருக்கின்றனர்.

சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் இயங்குகின்ற ஊடகவியலாளர் ஒருவருக்கே இந்த நிலைமை எனில், பொது மக்களுக்கு என்ன நிலை? என்பதைச் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

தமிழ் மக்களின் நம்பிக்கையாக இருக்கின்ற ஊடகத்துறையை தயவுசெய்து அடக்கி ஒடுக்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதுடன், இதற்கு முறையான நீதிவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த விடயத்திலே நீதித்துறை முறையாகச் செயற்பட்டு ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தினையும் சுயாதீனத் தன்மையையும் பாதுகாத்து, அதன்மூலம் எமது தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

(56)

-வெருகல், புன்னையடி-

# இழுவைப் பாதை படகு சேவை இடை நிறுத்தம்

சில தினங்களுக்கு முன் நடைபெற்ற கிண்ணியா- குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தைத் தொடர்ந்து வெருகல் முகத்துவாரம் மற்றும் புன்னையடிப் பகுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த இரு இழுவைப்பாதைகள் அவ்விடத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தப் பாதை எடுத்துச் செல்லப்பட்டதால் இக் கடவையினூடாக பயணிக்கும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எந்தவித போக்குவரத்து வசதியும் இன்றி நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். கடந்த பாராளுன்ற தேர்தல் காலத்தில் பொதுசனபெரமுன கட்சிக்காரர்களால் இந்தப் பாதைகள் இப்பகுதியில் போடப்பட்டதாகவும், போக்குவரத்து விடயத்தை கவனிக்க வேண்டிய வெருகல் பிரதேச சபையிடம் ஒப்படைக்கக் கோரியும் கட்சிக்காரர்கள் பிரதேச சபையிடம் ஒப்படைத்த நிலையில் சட்டவிரோதமாகவே இதனை மக்கள் பயன்படுத்தி வந்தனர். இக்காலத்தில் இவை இரண்டையும் பிரதேச சபை கையகப்படுத்தாது இருந்ததுடன், அவை பராமரிப்பு இன்றியுமே இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது.

பாதையை எடுத்துச் சென்றவர்களிடம் மக்கள் கேள்வி எழுப்பிய போது, பாதையினைத் திருத்திய பின் தருவதாகக் கூறியுள்ளனர். இந்த உள்ளகப் போக்குவரத்தை ஏற்பாடு செய்துகொடுக்கவேண்டிய பொறுப்பு வெருகல் பிரதேச சபையினுடையதாகும். இருந்தும் அவர்கள் சபைக்கு உள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி பாதையினைக் கையகப்படுத்தியிருக்க வேண்டும் அத்துடன் அதனை முறையாகப் பராமரித்திருக்க வேண்டும். இந்தக் கடமையில் இருந்து பிரதேச சபை தவறியிருக்கின்றது என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# கிரான்குளத்தின் பிரதான வீதியில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரான்குளத்தின் பிரதான வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிரான்குளம் விளையாட்டு மைதானத்தினை மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளும் நடவடிக்கையினை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிரான்குளம் பகுதியை சேர்ந்த விளையாட்டுக்கழக இளைஞர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். நீண்டகாலமாக விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்ட பகுதியை தனது காணியென கூறி மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் அபகரிக்க முனைவதாகவும் இதன்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

# கண்டி பன்வில தோட்டத்தில் தனி வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல்

கண்டி பன்வில கலகிரிய தோட்ட மக்களுக்கு புதிய வாழ்வு எனும் திட்டத்தின் கீழ் 20 தனி வீடுளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிராஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

கலகிரிய தோட்ட மக்களுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புக்கு அமைய தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2 கோடி 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் வீடமைப்பு திட்டம் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க பணிப்பாளர், தோட்ட அதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், பிரஜா சக்தி செயற்றிட்டத்தின் அதிகாரிகள்,பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஜனவரி முதல் தனியார் பஸ்களின் சேவை 25 வீதமாக குறைக்கப்படும்

**சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன**

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தனியார் பஸ்களின் சேவையினை 25 வீதமாக குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

சமீப நாட்களில் பஸ்களுக்கான உதிரிபாகங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. தனியார் பஸ்கள் கடுமையான நட்டத்தில் இயங்கி வருகின்றன. தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கையினை ஜனவரி மாதம் முதல் அரைவாசியாக குறைப்பதற்கான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது 50 வீதமான தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் தனியார் பஸ்களின் சேவையினை 25 வீதமாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ் தொழில்துறையினை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான சலுகைகளை வழங்குமாறு அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக கோரிய போதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது தனியார் பஸ் தொழில்துறையானது தினந்தோறும் நலிவடைந்து வருகின்றது.

வருமானம் குறைவடைந்துள்ளதாலும் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் தொலைதூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் உட்பட தனியார் பஸ்களின் எண்ணிக்கையில் அரைவாசியே தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் குறைவினாலும் தொடர்ந்து சேவையினை முன்னெடுக்க முடியாதுள்ளதுடன் டயர், ரியுப், பற்றரிகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளன. தனியார் போக்குவரத்து உரிமையாளர்களுக்கு தற்போது செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் கோயில் அருகில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0701477481


## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**யாழ் போதனாவைத்தியசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏலவிற்பனை செய்தல்**

**தலைவர், ஏலவிற்பனை சபை 2020 ஆம் ஆண்டுபின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.**

1. ஏலவிற்பனை தேசிய போட்டிப் பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் மார்கழி(December) மாதம் 06,07,08 ஆகிய மூன்றுதினங்களும் காலை 9.30 மணிமுதல் மாலை 2.00 மணிவரை இல. 111, பிரதானவீதி, மடத்தடியில் உள்ள யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களைப் பெறவிரும்புபவர்கள் வைத்தியசாலைக் காசாளரிடம் ரூபா 500.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா10,000.00 இனை வைத்தியசாலைக் காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனாவைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 09.12.2021ம் திகதி காலை 10.30மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதி கூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர், காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று வெள்ளிக்கிழமை (10.12.2021) மாலை 04.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்விமனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்.
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலைக் கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 021-2223149, 021-2212482 இனை அழைத்து பெற்றுக் கொள்ளமுடியும்

**பணிப்பாளர்,**
**போதனாவைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
**29.11.2021**


## சிறு விளம்பரம்

**தேவை**

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி சிறப்பான சேவையை வழங்கி ஓய்வுபெற்ற



செல்வி.சாரதாதேவி முத்துராஜா
(இந்து சமயம் SLTS 2-II)



திருமதி மகேஸ்வரி செல்வக்குமரன்
(ஆரம்பக்கல்வி SLTS-1)



திருமதி சூரியமலர் சிவகுமார்
(ஆரம்பக்கல்வி SLTS-1)

ஆசிரியர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர், ஊழியர் நலன்புரிச்சங்கம்
யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

### - ஷ்ரேயாஸ் அய்யர், சகா அபாரம்;-

# இந்தியா 234 ஓட்டங்களில் டிக்ளேர் நியூசிலாந்துக்கு 284 ஓட்ட இலக்கு





இந்திய அணியை சரிவில் இருந்து மீட்ட ஷ்ரேயாஸ் அய்யர், சகா அரைசதங்கள் விளாச நியூசிலாந்துக்கு 284 ரன்கள் இலக்காக நிர்ணயித்துள்ளது.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கான்பூரில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 345 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 296 ஓட்டங்கள் சேர்த்தது.

49 ஓட்டங்கள் முன்னிலையுடன் இந்திய அணி 2 ஆவது இன்னிங்சை தொடங்கியது. நேற்றைய 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 1 விக்கெட் இழப்பிற்கு 14 ரன்கள் எடுத்திருந்தது. நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. மயங்க் அகர்வால் 4 ஓட்டங்களுடனும், புஜாரா 9 ஓட்டங்களுடன் ஆட்டத்தை தொடங்கினர்.

புஜாரா 23 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், மயங்க் அகர்வால் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ரகானே 4 ஓட்டத்தில் வெளியேறினார். முதல் இன்னிங்சில் அரைசதம் அடித்த ஜடேஜா ஓட்டமேதும் எடுக்காமல் வெளியேறினார். இதனால் இந்தியா 51 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது.

6 ஆவது விக்கெட்டுக்கு ஷ்ரேயாஸ் அய்யர் உடன் அஸ்வின் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 4 ஆவது நாள் ஆட்டம் மதிய உணவு இடைவேளை வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. இந்தியா 4 ஆவது நாள் மதிய உணவு இடைவேளை 5 விக்கெட் இழப்பிற்கு 84ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷ்ரேயாஸ் அய்யர் 18 ஓட்டங்களுடனும், அஸ்வின் 20 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

உணவு இடைவேளை முடிந்த பின்னர் இருவரும் ஆட்டத்தை தொடங்கினர். அஸ்வின் 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

7 ஆவது விக்கெட்டுக்கு ஷ்ரேயாஸ் அய்யர் உடன் சகா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் சிறப்பாக விளையாடியது. ஷ்ரேயாஸ் அய்யர் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். சகா அரைசதம் அடித்து 61 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, இந்தியா 81 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 234 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது, 2 ஆவது இன்னிங்சை டிக்ளேர் செய்வதாக அறிவித்தது.

அப்போது சகா 61, அக்சார் பட்டேல் 28 ஓட்டங்கள் எடுத்தும் களத்தில் இருந்தனர். டிம் சவுத்தி, ஜேசின் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். தற்போது இந்தியா 283 ஓட்டங்;கள் முன்னிலைப் பெற்றுள்ளது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 284 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இன்று ஆட்டத்தின் இறுதிநாளாகும்.

## இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன் அரையிறுதியில் பி.வி. சிந்து தோல்வி

இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன் போட்டி பாலி நகரில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் உலக சம்பியனும், தரவரிசையில் 7 ஆவது இடத்தில் இருப்பவருமான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, முன்னாள் உலக சம்பியனும், 8 ஆம் நிலை வீராங்கனையுமான ராட்சனோக் இன்டானோனை (தாய்லாந்து) சந்தித்தார். இதில், பி.வி.சிந்து 21-15, 9-21, 14-21 என்ற செட் கணக்கில் ராட்சனோக்கிடம் தோல்வியைச் சந்தித்தார்.

சமீபத்தில் நடந்த இந்தோனேசியா மாஸ்டர்ஸ், பிரெஞ்சு ஓபன் போட்டியிலும் பி.வி.சிந்து அரையிறுதியில் தோற்று வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.




## ஆசிய இளையோர் பரா விளையாட்டு பஹ்ரைனுக்கு புறப்பட்டது இலங்கை



பஹ்ரைனின் மனமா நகரில் அடுத்த மாதம் 2 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ள 4 ஆவது ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக இலங்கை குழாம் இன்றைய தினம் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

இப்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 7 பேர் போட்டியிடவுள்ளனர்.

20 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்கும் ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் மெய்வல்லுநர் போட்டி உள்ளிட்ட 9 வகையான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை குழாமுக்கான பூரண அனுசரணையை முதல் தடவையாக விளையாட்டுத்துறை அமைச்சு வழங்குகிறது.

நடைபெற்று முடிந்த டோக்கியோ பராலிம்பிக்கில் இலங்கை உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று இலங்கைக்கு பெருமை ஈட்டிக்கொடுத்தமை, இம்முறை ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் பங்கேற்கும் இலங்கை இளையோர் பரா குழாத்துக்கும் சிறந்த அனுசரணை கிடைப்பதற்கும் உதவிகரமாக அமைந்ததாக தேசிய பராலிம்பிக் குழுவின் உப தலைவர் பிரியன்த்த பீரிஸ் தெரிவித்தார்.

ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் இலங்கை இதுவரை 3 தங்கப் பதக்கங்களும், 3 வெள்ளிப் பதக்கங்களும் வென்றுள்ளன.

இதில் 2009 இல் ஜப்பானின் டோக்கியோவில் நடத்தப்பட்ட முதலாவது அத்தியாயத்தில் ஒரேயொரு வெள்ளிப் பதக்கத்தை மாத்திரம் வென்றிருந்தது.

2013 இல் மலேஷியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாவது அத்தியாயத்தில் இலங்கை 3 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும் கைப்பற்றியிருந்து.

எனினும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் நகரில் கடைசியாக நடைபெற்ற 3 ஆவது அத்தியாயத்தில் இலங்கை எந்தவொரு பதக்கத்தையும் கைப்பற்ற முடியாமல் போனது.

இலங்கை குழாமில் இடம் பெற்றுள்ள ஜேசன் ஜயவர்தன மீது பலரும் தங்களது பார்வையை திருப்பியுள்ளனர். அதற்கு காரணம் அவரின் குறைவான உயரமாகும்.

18 வயதான ஜேசன், 130 சென்ரி மீற்றருக்கும் குறைவான உயரம் உடையவர்களுக்கான பிரிவில் இவர் பங்கேற்கவுள்ளார். இவர் ஆண்களுக்கான டி 41 100 மீற்றர் மற்றும் எப் 41 ஆண்களுக்கான குண்டெறிதல், தட்டெறிதல் ஆகிய மூன்று வகையான போட்டி நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

2017 இல் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற பரா நீச்சல் வீரரான நவீட் ரஹீம், இலங்கை குழாமின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப வைபவத்தின்போது இலங்கை தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுப்பர் லீக் கால்பந்தாட்டம் திங்களன்று மீண்டும் ஆரம்பம்



கொவிட் - 19 தொற்று நோய், 2022 உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று, தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளன சம்பியன்ஷிப் போட்டி ஆகியவற்றின் காரணமான இடைநிறுத்தப்பட்டிருந்த சுப்பர் லீக் கால்பந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

சுப்பர் லீக்கின் 3 ஆம் கட்டத்தில் நிறைவுசெய்யப்படாமல் இருக்கும் அப்கன்ட்றி லயன்ஸ் அணிக்கும் டிபெண்டர்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் 4ஆம் கட்டப் போட்டிகள் குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. 5ஆம் கட்டப் போட்டிகள் டிசம்பர் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நடைபெறும்.

6ஆம்,7ஆம் கட்டப் போட்டிகள் டிசம்பர் 17 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதிவரையும் 8ஆம் கட்டப் போட்டிகள் டிசம்பர் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளிலும் கடைசிக் கட்டப் போட்டிகள் 2022 ஜனவரி முதலாம் வாரத்திலும் நடத்தப்படும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன ஊடகப் பிரிவு முகாமையாளர் இர்ஷாத் ஹஷிம்தீன் தெரிவித்தார்.

## 2022 மகளிர் உலகக் கிண்ண தகுதியை இலங்கை இழந்தது



சிம்பாப்வேயில் நடைபெற்று வந்த மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுப் போட்டி கைவிடப்பட்டதை அடுத்து, நியூஸிலாந்தில் 2022 இல் நடைபெறவுள்ள மகளிர் உலகக் கிண்ண 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இலங்கை இழந்துள்ளது.

சிம்பாப்வேயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான 9 நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்று, கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக பல ஆபிரிக்க நாடுகளிலும் சிம்பாப்வேயில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால் கடந்த சனிக்கிழமையுடன் இரத்து செய்யப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவுக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான போட்டியும் பாகிஸ்தானுக்கும் சிம்பாப்வேக்கும் இடையிலான போட்டியும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

ஆனால் இலங்கை அணியின் உதவியாளர்களில் ஒருவர் கொரோனா தொற்றுக்கான நேர்மறை அறிக்கையைக் கொண்டிருந்ததால் இலங்கைக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான போட்டி கைவிடப்பட்டது.

நியூஸிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு கடைசி 3 தகுதிகாண் அணிகளைத் தீர்மானிக்கும் பொருட்டு 9 நாடுகளுக்கு இடையிலான மகளிர் தகுதிகாண் சுற்று சிம்பாப்வேயில் நடத்தப்பட்டு வந்தது.

இந்தத் தகுதிகாண் சுற்று இடையில் இரத்துச்செய்யப்பட்டதால் அணிகளுக்கான தரவரிசையில் 6, 7, 8 ஆம் இடங்களை வகிக்கும் முறையே பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஆகியன அடுத்த வருட மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட தகுதிபெற்றுள்ளதாக ஐ.சி.சி அறிவித்தது.

ஏற்கனவே மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட தகுதிபெற்றிருந்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென் அபிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் இந்த 3 நாடுகளும் இணைந்துகொள்ளும்.

இதேவேளை, ஐ.சி.சி மகளிர் சம்பின்ஷிப்புக்கான 3 ஆவது சுழற்சி (2022 - 2025) பருவகாலத்துக்கான அணிகளின் எண்ணிக்கை 8 இலிருந்து 10 ஆக அதகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென் அபிரிக்கா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், இலங்கை, அயர்லாந்து ஆகிய 10 நாடுகள் இந்த சுழற்சி பருவகாலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## பெண்கள் பிக் பாஷ் லீக் கிரிக்கெட் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி சம்பியன்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பெண்கள் பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட்டில் அடிலைட் ஸ்டிரைகர்ஸ் அணியை 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பெர்த் ஸ்கார்ச்சர்ஸ்.

அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கான பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட்டின் இறுதிப் போட்டி நேற்று பெர்த் நகரில் நடைபெற்றது. இதில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ், அடிலைட் ஸ்டிரைகர்ஸ் அணிகள் பலப் பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற அடிலைட் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பேட் செய்த பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் டிவைன் 35 ரன்னும், காப் 32 ஓட்டமும் எடுத்தனர்.

இதையடுத்து, 147 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலைட் அணி களம் இறங்கியது. அந்த அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 134 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி, முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# போதைப்பொருள் பாவனையால் வருடாந்தம் 43,000 பேர் மரணம்

## -கண்டி வைத்தியசாலை மனநலப் பிரிவு வைத்திய அதிகாரி-




போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைத் தடுப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் சமூகத்தில் போதைக்கு அடிமையானவர்கள் பலர் இருப்பதாக தேசிய கண்டி வைத்தியசாலையின் மனநலப் பிரிவு வைத்திய அதிகாரி கே. டபிள்யூ.எஸ். கல்யாணதிஸ்ஸ தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், சமூகத்தில் போதைக்கு அடிமையானவர்கள் பலர் இருப்பதால் சமூகத்தில் உள்ள அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது அதிகாரிகளின் கடமை . எனவே போதைக்கு அடிமையானவர்களை கண்டறிவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். சமூகத்தில் தனிநபர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிப்பதுடன், தகவல் மூலங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

2019 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது, போதைப்பொருள் பாவனையால் வருடாந்தம் 43,000 பேர் இறப்பதாகத் தெரியவந்துள்ளது. அதிகப்படியான போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையானது கடுமையான போதைப்பொருள் பிரச்சினையாக மாறி வருகின்றது.

எந்த வகையான போதைப்பொருளைப் பயன்படுத்தினாலும் அதனால் ஏற்படும் சமூகப் பேரழிவைத் தடுக்க முடியாது.

போதைப்பொருளுக்கு மக்களை ஈர்க்கும் வகையில் நிறுவனங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. போதைப்பொருளில் இருந்து விடுபட முடியும் ஆனால் சமூக நடவடிக்கைகள் மற்றும் சகாக்களின் அழுத்தம் காரணமாக மீண்டும் அடிமையாதல் ஏற்படுகிறது என்றார்.

# சு.க. எடுத்த தவறான முடிவே; அக்கட்சி வீழ்ச்சியுற காரணம்

## -பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம்-




யானையின் வாலை பிடித்து தொங்குவதென சுதந்திரக் கட்சி எடுத்த தவறான முடிவினால் அக்கட்சிக்கு தற்போது வீழ்ச்சியான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி இழந்து போன கட்சியின் ஆதரவாளர்களை மீண்டும் கட்சியின் பக்கம் நோக்கி ஈர்ப்பதற்காக பொதுஜன பெரமுன மீது விமர்சனங்களை முன்வைப்பதில் பயனில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் உண்மையில் எந்த பிரச்சினையும் இல்லை. கட்சி வீழ்ந்துள்ள நிலைமையை அக்கட்சியினர் நடந்துக்கொள்ளும் விதத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது.

முக்கியமாக அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. நாட்டுக்கு தேவையான சட்டங்களை நிறைவேற்றும் போதே மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சிக்கு எந்த தவறையும் செய்யவில்லை என்றார்.

இதேவேளை சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் பொதுஜன பெரமுனவை சேர்ந்த சிலருடன் மாத்திரமே பிரச்சினை உள்ளதாகவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிலர் எமது கட்சியின் தலைவருக்கு எதிராக வெறுமனே தாக்குதல் தொடுக்கின்றனர்.

அவற்றை பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதாலேயே கட்சியினர் பதிலளிக்கின்றனர்.எவ்வாறாயினும் அந்த பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையல்ல. அவற்றை கூடிய விரைவில் தீர்த்துக்கொள்வோம் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

# நாள் ஒன்றுக்கு 700 இற்கும் மேற்பட்ட தொற்றாளர் அடையாளம்

## -இராணுவத் தளபதி சவேந்திர சில்வா-



கடந்த இரண்டு தினங்களாக நாட்டில் நாள் ஒன்றுக்கு 700இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் பதிவாகுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.திருகோணமலையில் அமைந்துள்ள இராணுவத்தின் 22ஆவது படைபிரிவில்சனிக்கிழமை நடைபெற்ற சேதனப் பசளை உற்பத்திகளை உத்தியோகபூர்வமாக இலங்கை லக்பொஹர நிறுவனத்திற்கு கையளித்து விட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அத்துடன் தற்போது நாளொன்றுக்கு 15 தொடக்கம் 30 வரையிலான மரணங்கள் பதிவாகுவதாகவும் இதற்குள் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாக காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் கொரோனா தடுப்பூசி ஏற்றுவதற்கு தகுதியான மக்கள் தொகையில் 84 வீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.ஏனைய நாடுகளில் தடுப்பூசி ஏற்றப்பட்ட விகிதாசாரத்தை விட இந்த விகிதாசாரம் கூடிய அளவாக பதிவாகியுள்ளது.

தற்போது பூஸ்டர் தடுப்பூசி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதியின் விஷேட அறிவுரையின் பேரில் 60 வயது மேற்பட்ட தடுப்பூசி பெற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு வர முடியாதவர்களுக்கு நடமாடும் சேவை மற்றும் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

# வங்கி காவலாளி சடலமாக மீட்பு



மாத்தளை, உக்குவளை அரச வங்கி கிளையொன்றில் கடமையிலிருந்த காவலாளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

51 வயதானவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலம் மேலதிக மருத்துவ பரிசோதனைக்காக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 12 வயது மாணவி மீது பாலியல் துஸ்பிரயோகம்



வவுனியா-ஓமந்தை-குச்சுக்குளம் பகுதியினைச் சேர்ந்த 12 வயது பாடசாலை மாணவி பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்ட நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவிக்கு வயிற்று வலி ஏற்பட்ட நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியர்கள் மாணவியினை சிகிச்சைக்குட்படுத்திய போதே மாணவி பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. அதனையடுத்து வைத்தியர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.மாணவியிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த சமயத்தில் தன்னை ஒருவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளக்கியுள்ளதாக மாணவி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்துக்களுக்கும்-கிறிஸ்தவர்களுக்கும் நல்லுறவை சீர்குலைக்க சதி

## -என்கிறார் ஸ்ரீ வேலு சுரேஸ்வர சர்மா-



இந்து மக்களுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் இடையே இருக்கின்ற நல்லுறவினை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அகில இலங்கை இந்து மகா சபாவின் தலைவரும் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச்செயலாளருமான சிவ ஸ்ரீ வேலு சுரேஸ்வர சர்மா தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் லிந்துலை நாகசேனை பகுதியிலும் எல்ஜின் தோட்ட பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள மாதாவின் திருச்சொருப சிலை இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டமை தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கொட்டகலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் மலையகத்தில் நீண்டகாலமாக கிறிஸ்தவர்களும் இந்துக்களும்; மிகவும் அந்நியோந்நியமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இடையில் எப்போதும் சமய ரீதியான பேதங்கள் இருக்கவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் நாகசேனை பகுதியிலும்; எல்ஜின் பகுதியிலுமுள்ள மாதா சொரூபமும் உடைக்கப்பட்டுள்ளன. இதனை எவர் செய்தாலும் தாராதரமின்றி அவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த சிலை உடைப்பு தொடர்பாக எவருக்காவது தெரிந்திருந்தால் அது தொடர்பாக பொலிஸாருக்கோ அல்லது மலையக இந்து குருமார் ஒன்றியத்துக்கோ அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோருகின்றோம். இந்த சிலை உடைப்பு காரணமாக கிறிஸ்தவ மக்களுக்கு ஏற்பட்ட துயரத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம் என்றார்.

# தந்தை தாக்கியதில் மகன் உயிரிழப்பு

குளியாப்பிட்டி,கடவளகெதர பகுதியிலுள்ள வீடொன்றில் இளைஞர் ஒருவர் தந்தையால் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. மதுபோதையில் வீட்டுக்கு வந்த குறித்த இளைஞர் தந்தையையுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் பின் தாக்கியுள்ளார். இவ்வாறான நிலையிலேயே தந்தை மகன் மீது பொல்லால் தாக்கியுள்ளார்.இதனால் காயமடைந்த மகன் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் முனமல்தெனியவைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் இது தொடர்பில் 46 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF GRADUATE STUDIES**
**VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under-mentioned post from suitably qualified persons up to **10.12.2021.**

**1. Management Assistant – (ON CONTRACT)**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at One Sitting with credit passes in
i) Sinhala/ Tamil
ii) English Language/ English Literature
iii) Mathematics

**AND**

2. Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at One Sitting (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)
3. Preference will be given to those who possess the following;
   a. Fluency in English
   b. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from recognized institutes.
   c. Two years of experience in the use of computer application packages.
4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 36,900 (fixed)
- This appointment is on fulltime contract basis for a period of six months, extendable as per need.

**HOW TO APPLY:**

Applications should be on **specified form (for each post)** issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.** Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna** Collection Account Number: 970 0000 9000 0387. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied for on its top left hand corner and send under registered post to reach us on or before **10.12.2021** to the following address.

**Assistant Registrar,**
**Faculty of Graduates Studies, University of Jaffna,**
**Palaly Road, Thirunelvely, Jaffna.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received. Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**26.11.2021**

# அம்பலாங்கொடவில் ருகுணு குமாரி மோதியதில் வான் சாரதி காயம்



அம்பலாங்கொட, கந்தேகொட பகுதியிலுள்ள ரயில் கடவையில் வானொன்றை ருகுணு குமாரி ரயில் மோதியதில் வான் சாரதி காயங்களுக் குள்ளாகியுள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றதாகவும் ரயில் கடவையில் சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்த போதிலும், அதனை பொருட் படுத்தாமல் சாரதி வானை செலுத்திய தால் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதா கவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த வான் சாரதி சிகிச்சைகளுக்காக பலபிட்டி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குப்பிழானில் குருபூசை

சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமு கநாவலரின் குருபூசை நேற்று முன்தி னம் சனிக்கிழமை குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் எளிமையாக இடம்பெற்றது.

குறித்த குருபூசை காலை 9 மணியளவில் விநாயகர் வழிபாட்டு டன் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து நாவலரின் திருவுருவப் படத்திற்கு விசேட தீபாராதனை வழிபாடுகளும், திருமுறை ஓதுதலும் நடைபெற்றது. (18)

## மகாவலி ஆற்றிற்குள் பாய்ந்தது கார்; ஒருவரை காணவில்லை; இருவர் மீட்பு




கண்டி, குருதெனிய வீதியில் இலுக் மோதறை பகுதியில் கார் ஒன்று மகா வலி ஆற்றிற்குள் பாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. இவ்விபத்தின்போது குறித்த காரில் பயணித்த மூவரில் இருவர் மீட்கப் பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்தூவ தெரிவித் துள்ளார்.

இதனைத் தொடர்ந்து காரையும் காணாமல் போன நபரையும் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக இவ்விபத்து இடம்பெற்ற தாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

## இலங்கையருக்கு சிங்கப்பூர் அனுமதி



இலங்கை உள்ளிட்ட ஆறு நாடுக ளிலிருந்து வருகை தருவோர் இரு கொவிட் தடுப்பூசிகளையும் பெற்றி ருப்பார்களாயின் தனிமைப்படுத்த லின்றி நாட்டுக்குள் நுழைய அனுமதி வழங்கப்படவுள்ளதாக சிங்கப்பூர் சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதாவது, இரு தடுப்பூசிகளையும் பெற்ற இலங்கை, தாய்லாந்து, கம் போடியா, பிஜி, மாலைதீவு மற்றும் துருக்கி ஆகிய ஆறு நாடுகளிலிருந்து வருவோருக்கே எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதிமுதல் தனிமைப்படுத் தலின்றி சிங்கப்பூருக்குள் பிரவேசி க்க அனுமதி வழங்கப்படவுள்ளதா கவும் அந்த அதிகார சபை குறிப்பிட் டுள்ளது.

இதேவேளை, தாய்லாந்து பிரஜை களுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி முதல் சிங்கப்பூருக்கு பிரவேசிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்

வனஜீவராசிகள் மற்றும் வனங்கள் பாதுகாப்பு அமைச்சு

## மரக் குற்றிகள் மற்றும் அரிந்த மரங்கள் ஏலவிற்பனை — 2021 டிசம்பர் மாதம்

2021 டிசம்பர் மாதத்துக்கான கீழே குறிப்பிடப்பட்ட மரங்கள் விற்பனை மத்திய நிலையங்களிலுள்ள மரக்குற்றிகள் மற்றும் அரிந்த மரங்களை கீழே காட்டப்பட்ட திகதிகளில் மு.ப.10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

| விற்பனை மத்திய நிலையம் | குற்றிகளின் வகை | குற்றிகளின் தொகை | ஏல விற்பனை திகதி |
|---|---|---|---|
| பன்னிப்பிட்டிய 011-2838009 | தேக்கு | 30 | 2021.12.03 |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 10 | |
| நல்லூர் 021-2222349 | பாலை | 20 | 2021.12.06 |
| | தேக்கு | 10 | |
| | வேம்பு | 06 | |
| | வேலம் | 10 | |
| | தொம்ப | 04 | |
| | விலினை | 08 | |
| | பாரமர | 04 | |
| | மதுர | 04 | |
| | சூரியமார | 03 | |
| | கிரிகோன | 02 | |
| | முதிரை | 05 | |
| | இலுப்பை | 01 | |
| | தம்ப | 03 | |
| | சமுலை | 01 | |
| | நாவல் | 01 | |
| | தென்னை | 01 | |
| | பனை | 01 | |
| | தற | 01 | |
| | அரிந்த மரங்கள் | 15 | |
| கல்தெமுல்ல 011-2623174 | தேக்கு | 50 | 2021.12.07 |
| வவுனியா 024-2220512 | அரிந்த மரங்கள் | 35 | 2021.12.07 |
| பிங்கிரிய 032-2245642 | தேக்கு | 25 | 2021.12.08 |
| | மதுர | 15 | |
| | வேம்பு | 06 | |
| | மகோகனி | 02 | |
| | சமுலை | 01 | |
| | கலா | 01 | |
| | திமிரி | 01 | |
| | தென்னை | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 03 | |
| | தேக்கு வட்டத்தூண் | 01 | |
| கதுறுவெல 027-2225908 | பாலை | 04 | 2021.12.09 |
| | மதுர | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 05 | |
| | கலா | 01 | |
| | தேக்கு | 10 | |
| | வேம்பு | 03 | |
| | பலா | 01 | |
| | முதிரை | 05 | |
| | பாரமர | 01 | |
| | அரிந்த மரங்கள் | 15 | |
| யாழ்ப்பாணம் 021-2222349 | பலா | 03 | 2021.12.09 |
| | வேம்பு | 06 | |
| | தேக்கு | 07 | |
| | விலினை | 07 | |
| | புளி | 02 | |
| | பாலை | 08 | |
| | முதிரை | 04 | |
| | தென்னை | 01 | |
| | வேலம் | 11 | |
| | தம்ப | 06 | |
| | தொம்ப | 01 | |
| | கலா | 04 | |
| | பாரமர | 06 | |
| | கிரிகோன் | 01 | |
| | வேவரண | 02 | |
| | நாவல் | 01 | |
| | சமுலை | 01 | |
| | மதுர | 04 | |
| | பனை | 01 | |
| | வட்டத்தூண் | 01 | |
| நெலும்தெனிய 035-2284437 | தேக்கு | 01 | 2021.12.10 |
| | பலா | 05 | |
| | மகோகனி | 10 | |
| | மதுர | 10 | |
| | கினிசப்பு | 02 | |
| | ஹொற | 01 | |
| | வல்தெல் | 01 | |
| மீகம 033-2275666 | தேக்கு | 40 | 2021.12.10 |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 25 | |
| | அரிந்த மரங்கள் | 80 | |
| பூஸ்ஸ 091-3094037 | தேக்கு | 10 | 2021.12.10 |
| | பயினஸ் | 20 | |
| | மகோகனி | 04 | |
| பேருவளை 034-2277928 | தேக்கு | 20 | 2021.12.10 |
| | பலா | 03 | |
| | அரிந்த மரங்கள் | 60 | |
| அத்கல 081-2056136 | பலா | 15 | 2021.12.13 |
| | மைக்குரோபில் | 02 | |
| | மகோகனி | 13 | |
| | கினிசப்பு | 06 | |
| | கிராண்டிஸ் | 03 | |
| | வல்தெல் | 01 | |
| | சூரியமார | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 08 | |
| | அரிந்த மரங்கள் | 50 | |
| தம்புக்கள 055-2273797 | தேக்கு | 45 | 2021.12.13 |
| | அரிந்த மரங்கள் | 50 | |
| ஓடு கட்டான 021-2061789 | தேக்கு | 50 | 2021.12.13 |
| | கதுரு | 02 | |
| | கலப்பு தற | 02 | |
| பல்லேகலே 081-2421535 | பலா | 11 | 2021.12.14 |
| | முதிரை | 02 | |
| | கல்துதிய | 04 | |
| | மகோகனி | 08 | |
| | கொலொன் | 02 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 04 | |
| | வல்தெல் | 02 | |
| | தம்ப | 01 | |
| | தேக்கு | 03 | |
| | கம்மலு / தேக்கு | 03 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 05 | |
| | அரிந்த மரங்கள் | 50 | |
| | கதவு நிலை / யன்னல் நிலை / பல்வேறு | 29 | |
| | தற | 01 | |
| கிலேவரதுத்த 011-2650208 | தேக்கு | 60 | 2021.12.14 |
| தம்புக்கள 055-2273797 | மதுர | 20 | 2021.12.14 |
| | முதிரை | 20 | |
| | பாலை | 05 | |
| | இலுப்பை | 06 | |
| | கொலொன் | 05 | |
| | விலினை | 05 | |
| | கலா | 05 | |
| | சூரியமார | 03 | |
| | வேம்பு | 05 | |
| | கம்மலு | 20 | |
| | கல்துதிய | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 30 | |
| | கம்பத்தூண் | 02 | |
| | தற கனிமீற | 16 | |
| தலாவ 025-2276527 | தேக்கு | 45 | 2021.12.14 |
| | தேக்குத்தூண் | 02 | |
| உனவடுன 091-2245733 | அரிந்த மரங்கள் | 75 | 2021.12.14 |
| மாத்தளை 066-2230567 | பலா | 10 | 2021.12.15 |
| | பாரமர | 01 | |
| | கினிசப்பு | 02 | |
| | கருங்காலி | 01 | |
| | மகோகனி | 02 | |
| | தேக்கு | 25 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 01 | |
| வெல்லவாய 055-2274338 | தழுது / அட்டக்கா / பயினஸ் | 01 | 2021.12.15 |
| | விலினை | 01 | |
| | கலா | 01 | |
| | அகேஷியா டெகறன | 01 | |
| | மா | 01 | |
| | வேம்பு | 01 | |
| | முதிரை | 01 | |
| | மாதன் | 01 | |
| | புளி | 02 | |
| | கம்மலு | 15 | |
| | மதுர | 05 | |
| | தேக்கு | 20 | |
| மதவாச்சி 025-2245665 | தேக்கு | 40 | 2021.12.15 |
| | துனுமடல | 01 | |
| | முதிரை | 08 | |
| | பாலை | 04 | |
| | வேம்பு | 05 | |
| | மதுர | 02 | |
| | நாவல் | 02 | |
| | கொடகிறை | 01 | |
| | சூரியமார | 01 | |
| | இலுப்பை | 02 | |
| | கலா | 02 | |
| | விலினை | 02 | |
| | பாரமர | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 15 | |

கவனிக்கவும் - கொவிட்-19 சம்பந்தமாக அரசாங்கம் மற்றும் சுகாதாரப் பிரிவால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விற்பனை நடவடிக்கை ஏற்பாடு செய்யப்படும். அரசால் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

| விற்பனை மத்திய நிலையம் | குற்றிகளின் வகை | குற்றிகளின் தொகை | ஏல விற்பனை திகதி |
|---|---|---|---|
| கிளிநொச்சி 021-2285409 | விலினை | 06 | 2021.12.15 |
| | பாலை | 25 | |
| | முதிரை | 05 | |
| | கீரிய | 04 | |
| | வேலம் | 03 | |
| | புளி | 05 | |
| | கலா | 02 | |
| | சூரியமார | 02 | |
| | ஒதிய | 02 | |
| | தேக்கு | 05 | |
| | கிரிகேன் | 01 | |
| | கதுரு | 03 | |
| | தம்ப | 03 | |
| | தென்னை | 01 | |
| | பலா | 01 | |
| | பனை | 02 | |
| | தற | 01 | |
| | அரிந்த மரங்கள் | 27 | |
| | வீட்டுப்பொருட்கள் (கதிரை) | 01 | |
| | யன்னல் மூடி | 01 | |
| | யன்னல் நிலை | 01 | |
| மொரஹஹகந்த மெதபிதெல்ல (நாஉல) 066-3925399 | கருங்காலி | 05 | 2021.12.16 |
| | முதிரை | 05 | |
| | தம்ப | 05 | |
| | இலுப்பை | 05 | |
| | விலினை | 05 | |
| | மதுர | 02 | |
| | கொலொன் | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 70 | |
| யாழ்ப்பாணம் 021-2222349 | அரிந்த மரங்கள் | 68 | 2021.12.16 |
| | யன்னல் மூடி | 01 | |
| | யன்னல் நிலை | 01 | |
| தலல 041-2259898 | அரிந்த மரங்கள் | 70 | 2021.12.16 |
| தெல 045-2279139 | தேக்கு | 06 | 2021.12.16 |
| | முதிரை | 06 | |
| | பலா | 14 | |
| | ரெதுன் | 02 | |
| | மகோகனி | 06 | |
| | மதுர | 12 | |
| | கினிசப்பு | 01 | |
| | ஹொற | 03 | |
| | அரிந்த மரங்கள் | 70 | |
| புத்தளம் 032-2265372 | தேக்கு | 40 | 2021.12.16 |
| | மதுர | 05 | |
| | வேம்பு | 04 | |
| | றோபஸ்ரைன் | 02 | |
| | தென்னை | 01 | |
| | கலா | 01 | |
| | பனை | 01 | |
| | அகேஷியா | 01 | |
| | இலுப்பை | 01 | |
| | பாலை | 02 | |
| | கீரிய | 02 | |
| | வட்டத்தூண் | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 02 | |
| | தற | 04 | |
| | அரிந்த மரங்கள் | 50 | |
| நவினமடம் 031-2251096 | தேக்கு | 30 | 2021.12.17 |
| | வேம்பு | 10 | |
| | சமுலை | 01 | |
| | பலா | 02 | |
| | மதுர | 05 | |
| | அரிந்த மரங்கள் | 12 | |
| கடவத்த 011-2925080 | தேக்கு | 10 | 2021.12.17 |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 04 | |
| | அரிந்த மரங்கள் | 30 | |
| மின்னேரிய 027-2055272 | தேக்கு | 50 | 2021.12.17 |
| தம்புளுஹல 066-2283372 | தேக்கு | 30 | 2021.12.20 |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 15 | |
| குருநாகல் 037-2221825 | தேக்கு | 22 | 2021.12.20 |
| | மகோகனி | 08 | |
| | பலா | 06 | |
| | வேம்பு | 06 | |
| | முதிரை | 02 | |
| | ஹெலம்ப | 01 | |
| | கலா | 01 | |
| | பெய்மார | 01 | |
| | மல்மார | 01 | |
| | சப்பு | 01 | |
| | சவுக்கு | 01 | |
| | மதுர | 01 | |
| | கல்துதிய | 03 | |
| | பேருமிடியா | 02 | |
| | வீரோ | 02 | |
| | நாவல | 02 | |
| | றொம்பொசிய | 01 | |
| | காயா | 01 | |
| | தற | 01 | |
| | அரிந்த மரங்கள் | 29 | |
| உடவல 077-2642383 | மதுர | 23 | 2021.12.20 |
| | விலினை | 04 | |
| | பாலை | 20 | |
| | முதிரை | 13 | |
| | வேலம் | 03 | |
| | சமுலை | 01 | |
| | தம்வெதின் | 03 | |
| | ஹெலம்ப | 02 | |
| | கலா | 12 | |
| | இலுப்பை | 07 | |
| | மென்டோரா | 03 | |
| | தம்ப | 02 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 01 | |
| எகொ. உயன 011-2657309 | தேக்கு | 40 | 2021.12.21 |
| | அரிந்த மரங்கள் | 08 | |
| தலல 041-2259898 | பலா | 10 | 2021.12.21 |
| | மகோகனி | 15 | |
| | தேக்கு | 20 | |
| | தம்ப | 01 | |
| | லுனுமிதெல்ல | 01 | |
| | மதுர | 10 | |
| | தட்ட | 01 | |
| அநுராதபுரம் 025-2234055 | தேக்கு | 15 | 2021.12.21 |
| | கலா | 02 | |
| | பாலை | 09 | |
| | முதிரை | 01 | |
| | சமுலை | 01 | |
| | தம்ப | 04 | |
| | பலா | 01 | |
| | வேம்பு | 05 | |
| | கலப்பு வட்டத்தூண் | 01 | |
| | தேக்கு வட்டத்தூண் | 01 | |
| | தேக்கு கம்பத்தூண் | 03 | |
| | கலப்பு தற | 03 | |
| | அரிந்த மரங்கள் | 57 | |
| மல்சிறிபுர 037-2250380 | தேக்கு | 50 | 2021.12.22 |
| | மதுர | 25 | |
| | பலா | 10 | |
| | சூரியமார | 03 | |
| | கலா | 15 | |
| | துனி | 01 | |
| | மகோகனி | 05 | |
| | தென்னை | 02 | |
| | வேம்பு | 01 | |
| | பாலை | 05 | |
| | இலுப்பை | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 15 | |
| | அரிந்த மரங்கள் | 80 | |
| விளன் குளம் 026-2242173 | தேக்கு | 35 | 2021.12.22 |
| | முதிரை | 10 | |
| | பாலை | 10 | |
| | விலினை | 08 | |
| | வேம்பு | 08 | |
| | வேலம் / வெவரண | 04 | |
| | கீரிய | 02 | |
| | தம்ப | 02 | |
| | அல்லூல | 02 | |
| | அரிந்த மரங்கள் | 15 | |
| திம்பால கட்டுவ 047-2233206 | தேக்கு | 20 | 2021.12.22 |
| | மதுர | 50 | |
| | முதிரை | 15 | |
| | பலா | 07 | |
| | மகோகனி | 05 | |
| | சமுலை | 03 | |
| | விலினை | 02 | |
| | வேம்பு | 01 | |
| | சூரியமார | 05 | |
| | கொலொன்பு | 02 | |
| | வேம்பு | 20 | |
| | இலுப்பை | 03 | |
| | பேருமிடியா | 03 | |
| | கலா | 05 | |
| | நாவல் | 02 | |
| | வல்தெல் | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 06 | |

| விற்பனை மத்திய நிலையம் | குற்றிகளின் வகை | குற்றிகளின் தொகை | ஏல விற்பனை திகதி |
|---|---|---|---|
| தலாவ 025-2276527 | முதிரை | 13 | 2021.12.22 |
| | பாலை | 10 | |
| | கலா | 07 | |
| | கதுரு | 01 | |
| | வேம்பு | 10 | |
| | இலுப்பை | 03 | |
| | கொலொன் | 05 | |
| | கொடகிறை | 02 | |
| | மதுர | 10 | |
| | மாதன் | 01 | |
| | சூரியமார | 05 | |
| | கல்துதிய | 02 | |
| | ஹெலம்ப | 08 | |
| | மகோகனி | 01 | |
| | தம்ப | 01 | |
| | கீரிய | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 05 | |
| | கலப்பு தற | 04 | |
| இரத்மலானை 011-2635527 | தேக்கு | 35 | 2021.12.23 |
| | அரிந்த மரங்கள் | 20 | |
| பொறலந்த 057-2280555 | மைக்ரோபில் | 08 | 2021.12.23 |
| | கிராண்டிஸ் | 10 | |
| | சூரியமார | 05 | |
| | மதுர | 10 | |
| | தேக்கு | 04 | |
| | சிற்றி டோரா | 05 | |
| | முதிரை | 12 | |
| | மகோகனி | 02 | |
| | விலினை | 06 | |
| | கலா | 06 | |
| | பலா | 07 | |
| | கொலொன் | 05 | |
| | இலுப்பை | 05 | |
| | வேலம் | 01 | |
| | மென்டோரா | 01 | |
| | ஹெலம்ப | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 05 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 02 | |
| அம்பாந்தோட்டை 047-3624616 | பாலை | 10 | 2021.12.23 |
| | முதிரை | 04 | |
| | வேம்பு | 22 | |
| | தென்னை | 03 | |
| | தேக்கு | 02 | |
| | புளி | 01 | |
| | மதுர | 08 | |
| | வீபன | 01 | |
| | கமல்டென்சிஸ் | 02 | |
| | பலா | 02 | |
| | பாரமர | 08 | |
| | ரெதுன் | 01 | |
| | சூரியமார | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 04 | |
| | மகோகனி / சூரியமார | 01 | |
| | அரிந்த மரங்கள் | 30 | |
| உனவடுன 091-2245733 | தேக்கு | 15 | 2021.12.27 |
| | பலா | 20 | |
| | வேம்பு | 02 | |
| | ரெதுன் | 03 | |
| | மகோகனி | 05 | |
| | மதுர | 01 | |
| | பாரமர | 01 | |
| | அட்டோனியா | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 02 | |
| வவுனியா 024-2220512 | முதிரை | 05 | 2021.12.28 |
| | வேம்பு | 14 | |
| | கீரிய | 01 | |
| | பாலை | 09 | |
| | திமிரி | 01 | |
| | தம்ப | 01 | |
| | இலுப்பை | 03 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 45 | |
| | வட்டத்தூண் | 01 | |
| பதியதலாவ 063-3631857 | தேக்கு | 40 | 2021.12.28 |
| | முதிரை | 05 | |
| | பலா | 03 | |
| | கல்துதிய | 01 | |
| | வேம்பு | 03 | |
| | கம்மலு | 01 | |
| | அல்ஹூல | 01 | |
| | வேலம் | 03 | |
| | விலினை | 02 | |
| | கொலொன் | 03 | |
| | சூரியமார | 03 | |
| | தம்ப | 02 | |
| | தம்ப / நாவல் | 01 | |
| | கலா | 03 | |
| | நாவல் | 02 | |
| | லுனுமிதெல்ல | 01 | |
| | அகேஷியா | 01 | |
| | நுக்அத்தன / ஒதிய | 02 | |
| மத்துகம 034-2249049 | தேக்கு | 03 | 2021.12.29 |
| | ரெதுன் | 04 | |
| | மகோகனி | 10 | |
| | வேம்பு | 01 | |
| | பலா | 27 | |
| | நாக | 02 | |
| | விலினை | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 03 | |
| | 4ஆவது வகுப்பு குற்றிகள் | 03 | |
| | அரிந்த மரங்கள் | 30 | |
| கங்கானிமுல்ல 037-2282683 | தேக்கு | 40 | 2021.12.29 |
| | மதுர | 30 | |
| | மகோகனி | 01 | |
| | மாதன் | 01 | |
| | புதுமார | 01 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 03 | |
| | பலா | 15 | |
| | வேம்பு | 10 | |
| | காயா | 05 | |
| | அகேஷியா | 05 | |
| | சூரியமார | 02 | |
| | விலினை | 01 | |
| | வட்டத்தூண் | 02 | |
| | அரிந்த மரங்கள் | 15 | |
| | ரேதுமிலிய | 03 | |
| | தென்னை | 02 | |
| மட்டக்களப்பு 065-2228392 | தேக்கு | 20 | 2021.12.29 |
| | மதுர | 01 | |
| | வேம்பு | 02 | |
| | இலுப்பை | 01 | |
| | அரிந்த மரங்கள் | 10 | |
| மின்னேரியா 027-2055272 | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 75 | 2021.12.30 |
| | அரிந்த மரங்கள் | 50 | |
| அம்பாறை 063-2223609 | தேக்கு | 35 | 2021.12.30 |
| | மதுர | 10 | |
| | வேம்பு | 08 | |
| | முதிரை | 02 | |
| | பாலை | 01 | |
| | கொலொன் | 01 | |
| | விலினை | 02 | |
| | சமுலை | 02 | |
| | தம்ப / கலா / நாவல் | 04 | |
| | காயா / றொபஸ்ரைன் | 02 | |
| | மா / பெய்மார | 01 | |
| நிக்கவெரட்டிய 037-2260909 | தேக்கு | 50 | 2021.12.31 |
| | முதிரை | 02 | |
| | மதுர | 07 | |
| | மகோகனி | 01 | |
| | கொலொன் | 02 | |
| | வேம்பு | 10 | |
| | சமுலை | 02 | |
| | மார | 03 | |
| | கீரிய | 02 | |
| | இலுப்பை | 02 | |
| | காயா | 02 | |
| | புதுமார | 01 | |
| | ஹெலம்ப | 02 | |
| | செர்பன்ரைன் | 01 | |
| | 3ஆவது வகுப்பு குற்றிகள் | 03 | |
| | பல்வேறு வகுப்பு குற்றிகள் | 05 | |
| | கம்பத்தூண் | 03 | |
| | வட்டத்தூண் | 02 | |
| அம்பாறை 063-2223609 | அரிந்த மரங்கள் | 50 | 2021.12.31 |
| | வெற்றிலை கொட்டு | 01 | |
| | கலப்பு கம்பத்தூண் | 01 | |
| | தேக்கு கம்பத்தூண் | 01 | |
| | தேக்கு வட்டப்பலகை | 02 | |

இதற்கு முன் ஏல விற்பனைக்காக முன்வைக்கப்பட்டு விற்கப்படாது எஞ்சியுள்ள மரக்குற்றிகள் இந்த ஏல விற்பனையில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் ஏல விற்பனையின் போது தொகை அளவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். ஒருவருக்கான அனுமதிக்கட்டணம் 150/= மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொ.பே:011 2866636 இல் பிரதி பொது முகாமையாளரிடம் (விற்பனை) பெற்றுக்கொள்ளலாம்.

"அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யும் மரங்களை ஏற்றிச்செல்வதற்கு விசேட போக்குவரத்து அனுமதிப்பத்திரம் அவசியமில்லை"

e:mail : dgmm@timco.lk hot line: 076 8030100 web : www.timco.lk

மரவிருட்சங்களின் தலைமைத்துவம் - அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்

தலைவர் - அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்

# தமிழகத்தில் 12வது மெகா தடுப்பூசி முகாம்; 50 ஆயிரம் இடங்களில் நடைபெற்றுவருகிறது



தமிழகத்தில் 12வது மெகா தடுப்பூசி முகாம் நேற்று நடைபெற்றிருக்கின்றது. சுமார் 50 ஆயிரம் இடங்களில் நேற்றைய தினம் தொடக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் சென்னை மாநகராட்சியில் மாத்திரம் நேற்று 1,600 இடங்களில் மெகா தடுப்பூசி முகாம் இடம்பெறுகின்றது. மேலும் மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு இதுவரை ஒரு கோடி பேருக்கும் மேல்

தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை தடுப்பூசி போடாமல் இருக்கின்ற 78 இலட்சம் பேரும் முதல் தவணை தடுப்பூசி போடாதவர்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ள முன்வர வேண்டும்

என மக்கள் நல்வாழ்வுத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிட த்தக்கது.

## டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற அனைத்து கட்சி கூட்டம்..!



நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையி ல் டெல்லியில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பாஜக, காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இன்று முதல் டிசம்பர் 23 ஆம் தேதி வரை நடைபெற உள்ள கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே, கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட 3 வேளாண் சட்டங்களை ரத்து செய்யும் மசோதாவை மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோ மர் மக்களவையில் தாக்கல் செய்ய உள்ளார்.

மேலும் கிரிப்டோகரன்சி மசோதா உள்ளிட்ட 26 மசோதாக்களை தாக்கல் செய்யவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

### அதிக வட்டி கொடுப்பதாக ஆசை காட்டி நடிகர், நடிகைகளிடம் 200கோடி மோசடி

இந்தியாவின் - தெலுங்கானா மாநிலத்தில் அதிக வட்டி கொடுப்பதாக ஆசை காட்டி சினிமா நடிகர்கள், நடிகைகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலரிடம் 200 கோடி ரூபாய் வரை மோசடி செய்ததாக கூறப்படும் கணவன், மனைவி கைது செய்யப்பட்டனர்.

ஐதராபாத்தில் உள்ள நர்சிங்கி காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதி யை சேர்ந்த ஷணில்பா, அவரது கணவர் ஆகியோர் தான் கைது செய்யப்ப ட்டவர்கள். அவர்களிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் பெரும்பாலானோர் தங்களிடம் இருந்த கருப்பு பணத்தை கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது தங்களிடம் பணமே கிடையாது என்று கூறிவிட்டார்கள். எனவே அவர்கள் வசூல் செய்த பணத்தை என்ன செய்தார்கள், எங்கு முதலீடு செய்திருக்கிறார்கள் என்பது பற்றி பொலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தொண்டு செய்வதே இலக்காகும் மனத்தின் குரலில் பிரதமர் பேச்சு!

நாட்டு மக்களுக்கு தொண்டாற்றுவதே தமது இலக்கு எனவும் அரசின் திட்டங்களினால் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றுவது தமக்கு மன நிறைவை தருவதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மனத்தின் குரல் என்னும் பெயரில் 83 ஆவது முறையாக வானொலியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது, கொரோனாவுக்கு எதிரான போர் இன்னும் முடியவில்லை என்றும்,

கொரோனா தடுப்பு விதிகளைப் பின்பற்றி நம்மையும், நம் அன்புக்குரியோரையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். நாட்டு மக் களுக்குத் தொண்டாற்றுவதே தமது இலக்கு என்றும்,

அரசின் திட்டங்களால் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றுவது தமக்கு மனநிறைவை அளிப்பதாகவும் தெரிவித்தார். உத்தரப்பிரதேசத்தின் ஜலாவுன் என்னுமிடத்தில் விவசாயிகளும் பொதுமக்களும் ஒன்றாக இணைந்து

நூன் என்கிற ஆற்றுக்குப் புத்துயிர் அளித்ததை எடுத்துக் கூறிய அவர், அனைவரின் வளர்ச்சிக்காக அனைவரும் பாடுபடுதல் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும் எனத் தெரிவித்தார்.

இந்தியாவில் புதிதாகத் தொடங்கப்பட்ட யூனிகார்ன் நிறுவனத்தின் மதிப்பு ஏழாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் உள்ளதாகவும், இதே போல் புதிதாகத் தொடங்கப்பட்ட 70 நிறுவனங்கள் ஏழாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். உலக அளவிலான சிக்க ல்களுக்கு அவை தீர்வை வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். ஆண்டுக்கு ஆண்டு புதிய நிறுவனங்கள் சாதனை அளவில் முதலீட்டை ஈர்த்து வருவதாகத் தெரிவித்தார். நாடு விடுதலை பெற்றதன் 75ஆம் ஆண்டு விழா, 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போரில் வென்றதன் பொன்விழா ஆகியவற்றைப் பல்வேறு வகைகளில் கொண்டாடி வருவதாகத் தெரிவித்தார். டிசம்பர் மாதத்தில் கடற்படை நாள், கொடிநாள் ஆகியன கொண்டாடப்பட உள்ளதைக் குறிப்பிட்ட அவர், இந் நாளில் நமது படைகளையும், அவற்றின் வீரர்களையும், அவர்களை ஈன்ற அன்னையர்களையும் நினைவுகூர்வதாகத் தெரிவித்தார். விடுதலைப் போராட்டத்தில் ஜான்சி, பந்தேல்கண்ட் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதுடன், ராணி இலட்சுமிபாய், ஜல்காரி பாய் ஆகிய வீராங்கனைகளும், ஹாக்கி வீரர் தயான் சந்தும் அப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டார்.

### நீட் தேர்வு தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநரிடம் கோரிக்கை..!



நீட் தேர்வு தொடர்பான சட்ட முன்வரைபை குடியரசு தலைவரின் ஒப்புதலு க்கு அனுப்பிவைக்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழக ஆளுநர் ஆ.என்.ரவியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

சென்னை- கிண்டி ஆளுநர் மாளிகையில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்தபோதே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இவ்வாறு கோரியுள்ளார். இந்த நீட் தேர்வு, ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளதா என்பதை ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழு, பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை கேட்டு தனது பரிந்துரைகளை தமிழக அரசிற்கு வழங்கியது. அதனடிப்படையில் கடந்த செப்டெம்பரில் தமிழக சட்டப்பேரவையில் தமிழ் நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தென் ஆபிரிக்காவில் இருந்து பெங்களூர் வந்த இருவருக்கு டெல்டா வகை கொரோனா பாதிப்பு

தென்னாபிரிக்காவில் இருந்து பெங்களூர் வந்த இருவருக் டெல்டா வகை திரிபு வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு ஒமிக்ரான் பாதிப்பு இருக்கலாம். என கூறப்படுகின்து.

இதுகுறித்து பேசிய பெங்களூர் புறநகர் துணை ஆணையர் கே.ஸ்ரீனி வாஸ், அதிக ஆபத்துள்ளதாகக் கருதப்படும் ஒமிக்ரான் தொற்று பரவியு ள்ள 10 நாடுகளில் இருந்து இதுவரை 584 பேர் வந்துள்ளதாகக் குறிப்பிட்டார். அதில் தென் ஆப்பிரிக்காவில் இருந்து பெங்களூர் கெம்பேகவுடா விமானநிலையத்திற்கு வந்த 94 பேரில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட கே.ஸ்ரீனிவாஸ், அது உருமாறிய டெல்டா தொற்று என்றும், அவர்கள் இருவரும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.


සංවර්ධන වාසනාව
திகதி : 2021-11-27
வெற்றி வாரம் : 463 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,100,488/-
Z 20 25 49 6
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,134,120/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,206,968/-

கோட்பதி கப்ருக
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
V 13 15 29 50
சீட்டிழுப்பு வாரம் 770 | திகதி 2021. 11. 26 | வர்ணம் பச்சை | வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,078,000/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,062,260/-

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 105 | சீட்டிழுப்பு திகதி 2021.11.27 | சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 37 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,209,360/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1575 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2021.11.26 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் L 04 22 42 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,854,000/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1576 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2021.11.27 | தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் X 20 25 60 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,642,980/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-26 | வெற்றி வாரம் : 3287 | வர்ணம் : நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,179,566/-
வெற்றி இலக்கங்கள் 05 41 52 57 | மேஷம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,914,200/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-27 | வெற்றி வாரம் : 3288 | வர்ணம் : இள நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,365,836/-
வெற்றி இலக்கங்கள் 11 18 19 20 | கடகம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,703,520/-


அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை | சீட்டிழுப்பு இல: 1402 | வர்ணம்: மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2021.11.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,326,140/-
வெற்றி இலக்கங்கள் 09 35 72 77 | ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை | சீட்டிழுப்பு இல: 1401 | வர்ணம்: ஊதா | சீட்டிழுப்பு திகதி: 2021.11.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,262,100/-
வெற்றி இலக்கங்கள் 08 38 59 68 | ஆங்கில எழுத்து V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை | சீட்டிழுப்பு திகதி: 2021.11.26 | சீட்டிழுப்பு இல: 3736 | வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,122,040/-
வெற்றி இலக்கங்கள் 22 36 41 63 | ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
சனிக்கிழமை | சீட்டிழுப்பு திகதி: 2021.11.27 | சீட்டிழுப்பு இல: 3737 | வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,653,940/-
வெற்றி இலக்கங்கள் 46 50 60 61 | ஆங்கில எழுத்து T
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# ஒமிக்ரான் கொவிட் வைரஸின் புகைப்படம் வெளியாகியுள்ளது



புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள திரிபுபட்ட ஒமிக்ரான் கொவிட் வை ரஸின் புகைப்படம், இத்தாலிய விஞ்ஞானிகளினால் வெ ளி யி ட ப் பட் டுள்ளது.

உலக நாடுகளை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ள ஒமிக்ரான் வைரஸின் புகைப்படத்தை, முதன் முறையாக ரோமிலுள்ள Bambino Gesù குழந்தைகள் வைத்தியசாலையின் விஞ்ஞானிகளே வெளி யிட்டுள்ளனர். வைரஸின் உருவத்தில் ஒட்டியிருக்கும் மனிதர்களின் செல்களுக்குள் நுழைய தேவைப்படும் புரதத்தில், டெல்டா வகை வைரஸை விட ஒமிக்ரான் வைரஸில் அதிக பிறழ்வுகள் உள்ளதாக தெரியவந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனினும், இ வை டெல்டா வகை வைரஸை விட அதிக ஆபத்தானவை என கருத முடியாது எனவும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

## புதியவகை திரிபுட்ட கொரோனா வைரஸ் பேரழிவினை உருவாக்கப்போவதில்லை...!



புதிதாக அடையாளம் காணப்பட்டிருக்கும் திரிபுபட்ட கொரோனா வைரஸினால் பேரழிவு ஏற்படப் போவதில்லை. என இங்கிலாந்து விஞ்ஞானி பேராசிரிய ர் காலம் செம்பிள் கூறியுள்ளார்.

புதிய வகை கொரோனா ஒமிக்ரான் குறித்து உலக நாடுகள் அச்சம் அடைந்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் புதிய வகை கொரோனா வைரஸ் திரிபு குறித்து விஞ்ஞானி பேராசிரியர் காலம் செம்பிள் கூறியுள்ளதாவது, இது பேரழிவை ஏற்படுத்தாது. மேலும் எனது சகாக்கள் இந்த வைரஸ் பயங்கரமானது என கூறி இருக்கின்றனர். ஆனால் அவர்கள், நிலைமையை மிகைப்படுத்தி உள்ளதாகவே நான் கருதுகிறேன். இதேவே ளை தடுப்பூசியால் கிடைக்கின்ற நோய் எதிர்ப்புச்சக்தி, இன்னும் கடுமை யான நோயில் இருந்தும் மக்களை பாதுகாக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 26.13 கோடியை கடந்தது!



உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட வர்களின் மொத்த எண்ணிக்கை 26.13 கோடியை கடந்துள்ளது.

இதற்கமைய உலகம் முழுவதும் தற்போது, 26 கோடியே 13 இலட்சத்து 52 ஆயிரத்து 478 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்ப ட்டுள்ளது.

இதற்கிடையில் கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 23 கோடியே 60 இலட்சத்து 51 ஆயிரத்து 245 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலினால் இதுவரை 52 இலட்சத்து 11 ஆயிரத்து 922 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 2 கோடியே 89 ஆயிரத்து 311 பேர், சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 83 ஆயிரத்து 109 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

## பிரிட்டனில் 2 பேருக்கு ஓமிக்ரோன் தொற்றிருக்கின்றமை கண்டுபிடிப்பு..!




பிரிட்டனில் 2 பேருக்கு புதிய கொவிட் திரிபான ஓமிக்ரோன் (new var iant Omicron) தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார செயலாளர் தெரிவித்துள்ளார்.

ப்ரெண்ட்வுட், எசெக்ஸ் மற்றும் நொட்டிங்ஹாமில் (Brentwood> Ess ex> and Nottingham) புதிய பிறழ்வுகளை பிரித்தானிய சுகாதார பாதுகாப்பு நிறுவனம் கண்டறிந்துள்ளதாக சஜித் ஜாவிட் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிறழ்வுகள் தென்னாப்பிரிக்காவிற்கு பயணம் செய்ததோடு தொடர்புடையவை என்றும், மேலும் சோதனைகள் மற்றும் தொடர்புத் தடமறிதல் நடைமுறைகள் தொடர்வதால் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் சுயமாக தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய மாறுபாடு அடையாளம், தென்னா ஆபிரிக்கா, பாட்ஸ்வானா, பெல்ஜியம்,

ஹொங்கொங் மற்றும் இஸ்ரேலிலும் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன. இந்த நிலையில் பிரதம மந்திரி பொரிஸ் ஜோன்சன் டவுனிங் வீதி வாசஸ்தலத்தில், அரசாங்கத்தின் தலைமை அறிவியல் ஆலோசகர்சர் பேட்ரிக் வாலன்ஸ் மற்றும் இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிறிஸ் விட்டி (chief scientific advisor to the government> Sir Patrick Vallance> and the UK's chief medical officer Prof Chris Whitty.)ஆகியோருடன் செய்தியாளர் சந்திப்பை நடத்தவுள்ளார்.

(கடந்த சனிக்கிழமை 27ஆம் திகதி பிரித்தானிய நேரம் 5 மணிக்கு) தென்னாபிரிக்காவில் புதிய ஓமிக்ரோன் மாறுபாடு ஏற்பட்டமை குறித்து உலக சுகாதார நிறுவனத்திற்கு கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் உலகெங்கிலும் உள்ள நாடுகள் தற்போது ஓமிக்ரோனின் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தென்னப்பிரிக்க நாடுகளுடனான பயணத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன. பத்து நாடு கள் தப்போது பிரித்தானியாவின் சிவப்பு பயண பட்டியலில் உள்ளன, இந்த நாடுகளில் இருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு பின்வரும் அனைவரும்

10 நாட்களுக்கு ஒரு விடுதியில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். நேற்று வெள்ளிக்கிழமை, தென்னாபிரிக்கா, நமீபியா, சிம்பாப்வே, பொட்ஸ்வானா, லெசோதோ மற்றும் எஸ்வதினி ஆகிய நாடுகளை பிரித்தானியா பட்டியலில் சேர்த்தது. கடந்த சனிக்கிழமையன்று தனது அறிவிப்பில், அங்கோலா, மொசாம்பிக், மலாவி மற்றும் சாம்பியா ஆகிய நாடுகளும் சேர்க்கப்படும் என சுகாதார செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஒமிக்ரான் அச்சம் வெளிநாடுகளில் இருந்து அவுஸ்திரேலியா வருவோருக்கு கட்டுப்பாடு...!



புது வகை ஒமிக்ரான் வைரஸ் அச்சம் காரணமாக, வெளிநாடுகளில் இரு ந்து வருவோருக்கு, அவுஸ்திரேலிய அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அதன்படி, ஆபிரிக்காவின் தென் பகுதியை சேர்ந்த 9 நாடுகளில் இருந்து வருவோருக்கு, விமான நிலையத்திலேயே பரிசோதனை செய்து, அவர்களை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

புதுவகை வைரஸ் வேகமாக பரவுவதால், மருத்துவக் குழுவின் ஆலோ சனைப்படி, மிகச்சிறந்த தடுப்பு நடவடிக்கைகளை, அவுஸ்திரேலியா எடுத்து வருவதாக, அந்நாட்டு பிரதமர் ஸ்காட் மோரிசன் தெரிவித்தார்.

## ஸ்பெயினில் புதிய வைரசுக்கு மத்தியில் களைகட்டிய கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



ஸ்பெயின் நாட்டில் திரிபுபட்ட புதிய வைரஸ் ஒமிக்ரான் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டங்கள் கோலாகலமாக நட ந்து வருகிறது. மாலகா, பார்சிலோனா, மேட்ரிட் உள்ளிட்ட பகுதிகள் 1 கோடியே 10 இலட்சம் விளக்குகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. பிரம்மாண்டமாக காட்சி அளிக்கும் சாலைகளை காண ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். கடந்த 2 ஆண்டுகளாக கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் ஊரடங்கால் இரத்தான நிலையில் நடப்பாண்டில் மக்கள் பெரும் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## நியூயோர்க் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனம்.!



அமெரிக்காவின் - நியூயோர்க் மாகாணத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்க தொடங்கியுள்ளதால் அங்கு பேரழிவு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தினசரி பாதிப்பு விகிதம் 3.45 சதவீதமாக உள்ளதுடன் 28 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர். இதேவேளை வைத்தியசாலைகளில் சரா சரியாக ஒரு நாளில் 300க்கும் மேற்பட்டோர்

சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறார்கள். எனவேதான், கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவுவதைத் தடுக்க அந்த மாகாணத்தில் பேரழிவு அவசர நிலையை ஆளுநர் கேத்தி ஹோகல் பிறப்பித்துள்ளார்.

இந்த மாகாணத்தில், புதிய வகை வைரஸான ஒமிக்ரான் கண்டறியப்படவில்லை. ஆனாலும் புதிய வைரஸ் உருவாகி நியூயோர்க்கில் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் ஆளுநர் கூறியுள்ளார்.

மேலும் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வதோடு, முன் எச்சரிக்கை வழிமுறைகளை பின்பற்ற வே ண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஸிர்கான் ஹைப்பர்சோனிக் ஏவுகணையைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்தது ரஷ்யா!



ஸிர்கான் ஹைப்பர்சோனிக் வகை ஏவுகணையைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்த ஏவுகணை மேற்கத்திய நாடுகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில் 6 ஆயிரத்து 670 மைல் தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்டதாக இருக்கும் என ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது. தலைநகர் மாஸ்கோவிற்கு அருகிலுள்ள ரியூடோவோ என்ற இடத்தில் இரகசிய ஆலையில் குறித்த ஏவுகணையை தயாரிப்பதற் கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் ஸிர்கான் ஹைப்பர்சோனிக் வகை ஏவுகணையை எதிர்வரும் ஆண்டில் தயாராக வைத்திருக்க ஜனாதிபதி புடின் உத்தரவிட்டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்யா, கடந்த ஒரு மாதத்திற்கு முன் இந்த ஏவுகணையை சோதனை செய்தமை குறிப்பிடத்தக்கது

## நியூயோர்க் மாநிலத்தில் கொரோனா வேகமாக பரவுவதால் பேரிடர் அவசரநிலைப் பிரகடனம்..!



கடந்த ஆண்டு ஏப்ரலுக்குப் பிறகு அதிக அளவில் கொரோனா தொற்று பரவுவதால், அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் பேரிடர் அவசர நிலையை பிறப்பிப்பதாக கவர்னர் கதே ஹோச்சுல் அறிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக நோய் தொற்று பாதித்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, தற்போது நாளொன்றுக்கு 300 க்கும் அதிகமானோர் அட்மிட் செய்யப்படுவதாக அரசாணை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். எனவே வரும் ஜனவரி 15 ஆம் திகதி வரை நியூயோர்க் மாநிலம் முழுதும் பேரிடர் அவசரநிலை பிறப்பிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து அங்கு மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தப்படுவதுடன், நோய் பரவுவதை தடுக்க தடுப்பூசி போடுவது தீவிரப்படுத்தப்படும்.

## ஆங்கில கால்வாயூடாக நுழைபவர்களை தடுக்கும் பிரிட்டனின் யோசனையை நிராகரித்தது பிரான்ஸ்.!



பிரான்ஸிலிருந்து தங்கள் நாட்டுக்குள் ஆபத்தான கடல் பயணம் ஊடாக அகதிகள் நுழைவதை தடுப்பதற்காக பிரிட்டன் முன்வைத்த யோசனைகளை பிரான்ஸ் நிராகரித்திருக்கின்றது.

பிரித்தானியாவை அடைய முயன்ற புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு, ஆங்கிலக் கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27பேர் உயிரிழந்ததையடுத்து இதுபோன்ற விபத்து நிகழாமல் இருக்க,

தாம் எடுக்க விரும்பும் ஐந்து படிகளை கோடிட்டுக் காட்டி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் கடிதமொன்றை அனுப்பி வைத்தார்.

இதில், பிரான்ஸ் கடற்கரையிலிருந்து அதிகமான படகுகள் வெளியேறுவதைத் தடுக்க கூட்டு ரோந்து, சென்சார்கள் மற்றும் ரேடார் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், பரஸ்பர கடல் ரோந்துகள் ஒருவருக்கொருவர் பிராந்திய நீரில் மற்றும் வா ன் வழி கண்காணிப்பு, பிரான்ஸ் உடனான இருதரப்பு வருவாய் ஒப்பந்தத்தில் உடனடி வேலை, உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆனால், பிரித்தானியா வரும் அனைத்து அகதிகளையும் பிரான்ஸ் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்; அகதிகள் வருவதைத் தடுப்பதற்காக பிரா ன்ஸ் கடற்கரைப் பகுதிகளில் பிரித்தானியா படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று பொரிஸ் ஜோன்ஸன் வலியுறுத்தியிருந்தார். எனினும், அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று பிரான்ஸ் அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் கேப்ரியல் அட்டல் தெரிவித்தார். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் கூட்டத்துக்கு பிரித்தா னிய உட்துறை அமைச்சர் பிரீத்தி படேலுக்கு

அழைப்பு விடுக்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார். இந்த ஆண்டு மட்டும் இதுவரை 25,700 பேர் இத்தகைய ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர். கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகமாகும்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.